பொதுசன நூலகம்
27 MAY 2004

Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகின் எப்பாகத்திலிருந்தும்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
மூலம்
தங்களுக்கு கிடைத்த இலக்கங்கள் 10உடன் எம்மை நாடுங்கள்
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
●வங்கிக்கணக்கு அவசியமில்லை
●கமிஷன் ஏதுமில்லை
●365 நாட்களிலும் எந்நேரத்திலும்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 5392
Fax:222 3214
E-mail: del-smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 0602212472

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆகிர் 07 (27.05.2004) வியாழக்கிழமை இதழ்:238

## இடைக்கால நிர்வாகம் பற்றி பேசாமல்

# இறுதித் தீர்வு குறித்துப் பேசுவதென்பது காலம் கடத்தும் ஏமாற்று முயற்சியே...!

### அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

**இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பாகப் பேசி தீர்வு காணப்பட்ட பின்னரே இறுதித் தீர்வுபற்றிப் பேசமுடியும். யதார்த்தபூர்வமானதும், நடைமுறைச்சாத்தியமானதுமான விடயங்களையே நாம் முன்வைத்துள்ளோம். இதனை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும் என தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்முடன் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசுகையிலேயே தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

எமது நிலைப்பாடு குறித்து நாம் மீண்டும் ஒருமுறை நோர்வே தரப்பினருக்குத் தெளிவாக விளக்கியிருக்கின்றோம்.

முக்கியமாக ஜனாதிபதி சந்திரிகாவும் அரசாங்கமும் விரும்புவது போல இடைக்கால நிர்வாகசபை தொடர்பான பேச்சுக்களோடு இறுதித்தீர்வு பற்றிய பேச்சுக்களும் முன்னெடுக்கப்படவேண்டும் என்கின்ற

(02 ஆம் பக்கம் பார்க்க)



தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருக்கும் சொல்ஹெய்ம் தலைமையிலான நோர்வே தூதுக்குழுவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது...!

### சொல்ஹெய்ம் குழு கொழும்பு திரும்பியது!

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பையடுத்து நோர்வே குழுவினர் நேற்றே கொழும்பு திரும்பினர்.

முன்னதாக நேற்றுக்காலை 10.00 மணியளவில் விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்ரரில் கிளிநொச்சிக்கு வந்த விசேட தூதுவர் சொல்ஹெய்ம் மற்றும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்ட் பிரட்ஸ்கர் குழுவினரை, அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் வரவேற்று பேச்சு நடைபெறும் இடத்திற்கு அழைத்துச் சென்றார்.

பின்னர் காலை 10.30 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் நோர்வேத்தரப்பு குழுவினருக்குமிடையே சுமார் இரண்டு மணித்தியாலமாக சந்திப்பு நடைபெற்றது.

இதன் பின்னர் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் கொழும்பிற்குத் திரும்பிச் சென்றனர்.

### உறுதியான இணக்கப்பாடு ஏற்பட்ட பின்னரே சமாதானப் பேச்சுக்கான இறுதித் தீர்மானம்!

#### தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின் பின் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான உறுதியான இணக்கப்பாடு உருவான பின்னரே பேச்சுவார்த்தை குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசிய பின்னர் ஊடகவியலாளர் மத்தியில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது-

பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்கும் முயற்சியின் ஒரு அங்கமாகவே இன்றைய சந்திப்பு இடம்பெற்றுள்ளது. அரச தரப்பையும், தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பையும் ஓர் உடன்பாட்டிற்கு கொண்டுவருவதில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் வரவேற்று பேச்சு நடைபெறும் இடத்திற்கு அழைத்துச் சென்றார்.

பின்னர் காலை 10.30 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் நோர்வேத்தரப்பு குழுவினருக்குமிடையே சுமார் இரண்டு மணித்தியாலமாக சந்திப்பு நடைபெற்றது.

இதன் பின்னர் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் கொழும்பிற்குத் திரும்பிச் சென்றனர்.

(கிளிநொச்சி)

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான உறுதியான இணக்கப்பாடு உருவான பின்னரே பேச்சுவார்த்தை குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசிய பின்னர் ஊடகவியலாளர் மத்தியில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது-

பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்கும் முயற்சியின் ஒரு அங்கமாகவே இன்றைய சந்திப்பு இடம்பெற்றுள்ளது. அரச தரப்பையும், தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பையும் ஓர் உடன்பாட்டிற்கு கொண்டுவருவதில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விசேட அதிரடிப்படையினர் ஊடுருவல்!

## கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு

(மட்டக்களப்பு)

விசேட அதிரடிப்படையினர் தமது பகுதிகளுக்குள் ஊடுருவியதாக தமிழீழ விடுதலைப் புலிகள், மட்டக்களப்பு மாவட்டப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சின்னவத்தை விசேட இராணுவமுகாம் பகுதியிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வக்கியெல்லை 35 ஆம் கிராமப் பகுதிக்குள் ஊடுருவியதாக தமிழீழ விடுதலைப் புலிகள், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

தமிழ்க் கிராமங்களுக்குள் விசேட அதிரடிப்படையினர் ஊடுருவுவதால் தமிழ்மக்கள் பெரும் அச்சமும் பீதியும் அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து தாம் உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ஆனால், இந்த ஊடுருவல் தொடர்பான குற்றச்சாட்டை விசேட அதிரடிப்படையினர் மறுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

# லொறி – சைக்கிள் விபத்தில் நீர்வேலியில் இளைஞன் பலி

நீர்வேலிப் பகுதியில் நேற்றுக் காலை சைக்கிள் ஒன்றுடன் லொறி மோதியதில் சைக்கிளில் பயணம் செய்த இளைஞர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 8.00 மணியளவில் நீர்வேலிச் சந்திக்கு சமீபமாகவுள்ள கண்ணாடித் தொழிற்சாலைக்கு முன்பாக இடம்பெற்றது.

உயிரிழந்த நபர் நேற்றிரவு வரை இனங்காணப்படவில்லை

உயிரிழந்த இளைஞர் சாம்பல் நிற ரவுசர் அணிந்திருந்தார். சுமார் 28 வயது மதிக்கத்தக்க இளைஞனின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக ரத்னசிறி நேற்றுப் பதவியேற்பு!

(கொழும்பு)

பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக ரத்னசிறி விக்கிரமநாயக்க நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்தார்.

இவருடன் சேர்த்து மேலும் இருவர் அமைச்சர்களாகப் பதவிப்பிரமாணம் செய்தனர்.

புத்தசாசன, பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் ஒழுங்கு சார்ந்த அமைச்சராகவும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும் ரத்னசிறி விக்கிரமநாயக்கவும், அரசியல் யாப்பு மறுசீரமைப்பு அமைச்சராக டி.யு குணசே

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய பாதுகாப்பு ஆலோசகராக ஜே.என்.டிக்ஸிற் நியமனமானார்!



இந்தியாவின் தேசியப்பாதுகாப்பு ஆலோசகராக முன்னர் இலங்கைக்கான இந்தியத் தூதுவராக கடமையாற்றிய ஜே.என்.டிக்ஸிற் நியமிக்கப்பட்டார்.

இவருக்கான இந்த நியமனத்தை பிரதமர் மன்மோகன்சிங் நேற்று வழங்கினார். 68 வயதான டிக்ஸிற் இந்தியாவின் வெளிநாட்டலுவல்கள் செயலாளராகவும் பணியாற்றியிருந்தார்.

இந்திய இராஜாங்க அமைச்சில் மிகவும் அதிகாரம்வாய்ந்த பதவியாகக் கருதப்படும் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் பதவியில் - பாரதீய

(12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

(சி/2489)

EXPOAIR

Your friend in the skies...

# இறுதித் தீர்வு குறித்து...

நிலைப்பாட்டிலுள்ள சிக்கல்களை, நெருக்கடிகளை நாங்கள் இன்று தெளிவாக விளக்கியுள்ளோம்.

எங்கள் தலைமைப்பீடத்தின் தீர்மானத்தின்படி இடைக்காலநிர்வாகம் தொடர்பாகப்பேசி அது பற்றிய தீர்வு கண்ட பின்னரே இறுதித்தீர்வு குறித்து பேசமுடியும் என்பதனை மீண்டும் நோர்வேத் தூதுவருக்கு தெளிவுபடுத்தியுள்ளோம்.

ஏனைய விடயங்களில் ஓரளவு இணக்கப்பாடு காணப்பட்டாலும் இடைக்கால நிர்வாகசபை தொடர்பான பேச்சுக்களோடு இறு தித்தீர்வு தொடர்பான பேச்சுக்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். என்பது தான் இப்பொழுது இந்த இணக்கப்பாட்டில் ஒரு நெருக்கடி நிலைக்கு கொண்டுவந்துள்ளது.

இந்த விடயத்தில் எமது தலைமைப்பீடத்தின் தெளிவான நிலைப்பாட்டை முன்வைத்துள்ளோம்.

எங்களுடைய மக்களின் ஆணை வடக்கு - கிழக்குப் பகுதியில் ஒரு இடைக்கால நிர்வாகசபை உருவாக்கப்படவேண்டும் என்பதும், யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பெரும் நெருக்கடிகளையும், அவலங்களையும் சந்தித்து நிற்கின்ற எமது மக்களுக்கான அபிவிருததிக்கும் புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் இதுவே வழிகோலும் என்பதும் எங்களுடைய எதிர்பார்ப்பும், அபிலாசையுமாகும். இதுவே மக்களுடைய ஆணையாக அண்மையில் தேர்தல் மூலமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே, இந்த அடிப்படையில் தான் பேசித் தீர்வுகாணப்படவேண்டுமென்பதை வலியுறுத்தியுள்ளோம்.

முக்கியமாக இறுதித் தீர்வு தொடர்பாக பேசுகின்றபோது, ஒரு இழுத்தடிப்பாகவும் ஏமாற்று முயற்சியாகவும் அது இருக்கக்கூடாது என்பதை அவர்களுக்குத் தெளிவாக விளக்கியுள்ளோம்.

ஏனெனில், நாங்கள் இறுதித் தீர்வு சம்பந்தமாகப் பேசுவதற்கு இன்றைய தென்னிலங்கை அரசியல் சூழல் அதற்கு தயாரில்லை. தென்னிலங்கையில் ஒரு அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கோ இறுதித் தீர்வினை தமிழர்களுக்கு வழங்குவதற்கோ அரசியலமைப்பில் எதுவித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை.

இந்த மாற்றங்கள் செய்யப்படாத வகையில் இறுதித் தீர்வு தொடர்பாகப் பேசிக்கொண்டிருப்பது என்பது எமது மக்களை நாங்கள் ஏமாற்றுவதாகவும் கால இழுத்தடிப்பை செய்வதுமாகவுமே முடியும் என்கின்ற எமது தலைமைப்பீடத்தின் முடிவை நாங்கள் மீண்டும் அவர்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

ஜனாதிபதியுடன் எமது நிலைப்பாடு தொடர்பாகப் பேசி ஒரு இறுதி நிலைபாட்டுக்கு வருவதாக நோர்வேத்தரப்பு எமக்கு கூறியுள்ளது.

அங்கு செய்தியாளர்களின் சில கேள்விகளுக்கு அளித்த பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

*கேள்வி:* பேச்சுவார்த்தை தொடர்பான கால தாமதத்திற்கு காரணம் என்ன?

*பதில்:* இந்த விடயம் தொடர்பாகத் தான் இன்னமும் இணக்கம் காணவில்லை.

தமிழர் தாயகப் பகுதியில் நாம் ஒரு இயல்பு நிலைமையைக் கொண்டுவந்து மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்து எமது அபிவிருத்திக்கும் புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கும் இந்தக் கட்டமைப்பை நிறுவிக் கொள்கின்ற அவசியத்தை நாம் வலியுறுத்தியுள்ளோம்.

### காலம் கடத்தும் அரசின் தந்திரம்

இறுதித் தீர்வை காண்பது என்பதை இந்த விடயங்களோடு சேர்த்துக்கொள்வது என்பது காலநீடிப்புச் செய்வதற்கான தந்திரோபாய நடவடிக்கையாகத் தான் அது இருக்கும் என்பதைத் தான் நாம் உணர்கின்றோம்.

இந்த விடயத்தை நாம் ஏற்றுக் கொள்ளமுடியாது. எமது தலைமைப் பீடத்தின் நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளோம்.

நோர்வேத் தரப்பு எமது செய்தியை எடுத்துக்கொண்டு ஜனாதிபதியிடம் சென்றுள்ளது. ஏனைய விடயங்களில் அநேகமாக பேச்சுவார்த்தை நடைமுறை ஒழுங்குகளில் பேச்சு வார்த்தை மேற்கொள்ளும் இடம், காலம் என்பவற்றில் ஓரளவு இணக்கப்பாடு காணப்பட்டிருக்கிறது.

இந்த ஒரு விடயத்தில் தான் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கான காலம் இதுவரை இழுபறிப்பட்டுச் செல்கிறது.

*கேள்வி:* ஆரம்பத்தில் இருந்தே இந்த இழுபறி ஏற்பட்டுள்ளதா அல்லது ஜனாதிபதிதான் புதிதாக இந்த இழுபறியை தொடங்கியுள்ளாரா?

*பதில்:* நோர்வே உதவி வெளிவிவகார அமைச்சரை நாம் மீண்டும் சந்தித்தபோது, எமது நிலைப்பாட்டை கூறியிருந்தோம்.

அவர்களும் அதற்குச் சாதகமாக ஜனாதிபதியிடம் இருந்து பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு சென்றார்கள். ஆனால் இதுவரை அவரிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. ஆகையால் தான் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

*கேள்வி:* விடுதலைப் புலிகள் ஏமாற்றத்தைத் தவிர்க்கும் முகமாக நான்கு விடயங்கள் தொடர்பாக எழுத்து மூலமான கோரிக்கைகள் விடப்பட்டுள்ளதாகவும் அதைத் தருவதற்கு இலங்கை அரசு முன்வந்துள்ளதாகவும் குறிக்கப்படுகின்றது.

அப்படியான கோரிக்கைகளை விடுதலைப் புலிகள் விடுத்துள்ளார்களா?

*பதில்:* நாங்கள் இந்தத் தடவை ஜனாதிபதியிடம் இருந்தும் அரசிடம் இருந்தும் தெளிவான பதில்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

### வலுவற்ற அரசிடம் உறுதி கேட்கிறோம்

ஏனெனில், சந்திரிகா அம்மையார் தலைமையிலான அரசாங்கம் பல கூட்டுக்கட்சிகளுடன் இணைந்துள்ள ஒன்றாகும். இத்தகைய ஒரு அரசு சிறுபான்மை அரசாகவே காணப்படுகின்றது. இந்த அடிப்படையில் ஒரு தெளிவான நிலைப்பாட்டை அரசு எடுப்பதும் தெளிவான உத்தரவாதங்களை அரசு தருவதும் முக்கியமானது.

இந்த அடிப்படையில் எமது நிலைப்பாடுகளை நாம் நோர்வேத் தரப்பிற்கு தெளிவாக்கியுள்ளோம். அரசாங்கத்திடம் இருந்து ஒரு இணக்கப்பாடு வருகின்றபோது, அந்த இணக்கப்பாடு நோர்வேத் தரப்பின் ஊடாகவரவேண்டும். அதன் பின்னர் தான் நாம் பேச்சுக்களை தொடங்குவது சாத்தியமானதாகும்.

*கேள்வி:* இந்தியா இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து இந்த விடயம் தொடர்பாக கதைத்துள்ளதா?

*பதில்:* ஊடகங்களின் ஊடாகத் தான் அதுபற்றி நாம் அறிந்திருக்கின்றோம். அதுபற்றிய அதிகார பூர்வமான நிலைப்பாடு கிடைத்த பின்னர்தான் தெளிவாக எதனையும் கூற முடியும்.

*கேள்வி:* கிழக்கு நிலவரம் தொடர்பாக ஏதாவது கூறமுடியுமா?

### கிழக்கின் கொலைகள் யுத்தநிறுத்த மீறலே

*பதில்:* இராணுவக் கட்டுப்பாட்டுப் பிர தேசங்களில் தொடர்ந்தும் கொலைகள் இடம் பெற்றுவருவதும் அங்கு யுத்தநிறுத்த மீறல்கள் நடைபெற்றுவருவதும் கண்டிக்கப்பட வேண்டியது. இந்த வகையில் யுத்த நிறுத்த மீறல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இது தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதாகக் காணப்படுமானால் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறக் கூடிய காரணமாக இது அமைய வாய்ப்பு காணப்படுகின்றது.

அண்மையில் நடந்த பல்கலைக் கழகப் பேராசிரியரது கொலை தொடர்பாகவும் நாம் எமது கண்டனத்தை தெரிவித்துள்ளோம்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது இராணுவத்தாலோ, இலங்கை சட்ட விதிகளாலோ கட்டுப்படுத்த முடியாவிட்டால் பாரிய பின்விளைவுகளை இது ஏற்படுத்தும் என்பதனை அவர்களுக்குத் தெளிவாகக் கூறியுள்ளோம்.

இது தொடர்பான செய்தியையும் நோர்வேத் தரப்பு ஊடாக நாம் தெரிவித்துள்ளோம்.

*கேள்வி:* மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் 15 பேர்கொண்ட ஊடுருவற் பிரிவினர் ஊடுருவியிருப்பதாக அறிய முடிகின்றது. அப்படியான சம்பவங்க்ள் இடம்பெற்றிருந்தால் இது தொடர்பாக ஆட்சேபனையை நீங்கள் தெரிவித்துள்ளீர்களா?

*பதில்:* இது தொடர்பான விடயம் கண்காணிப்புக் குழுவினரோடு சம்பந்தப்பட்டது. அவர்களுடன் எமது பிராந்திய மட்டப் பொறுப்பாளர்கள் தொடர்புகொண்டு எங்களுடைய ஆட்சேபனையையும் நிலைப்பாடுகளையும் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

நாங்களும் பொதுப்படையாக இந்த யுத்த நிறுத்த ஒப்பந்த நடைமுறைகள் கடைப்பிடிக்க வேண்டும் என்ற விடயத்தை வலியுறுத்தியுள்ளோம்.

*கேள்வி:* விதார் ஹெல்கிசன் ஒரு கருத்துச் சொன்னார். ஆனால், சொல் ஹெய்ம் இன்னொரு கருத்தைக் கூறினார். பேச்சுவார்த்தை இழுத்தடிப்புத் தொடர்பான இருவர் கருத்திலும் யார் சொல்வது உண்மை?

### எமது நிலைப்பாட்டில் நாம் தெளிவாகவுள்ளோம்

*பதில்:* எங்களைப் பொறுத்த வரையில் எமக்கு தெளிவான ஒரு நிலைப்பாடு இருக்கிறது. ஜனாதிபதி சந்திரிகா எமது நிலைப்பாடுகளை விரைவில் புரிந்துகொண்டு பேச்சுவார்த்தைக்கான சூழலை விரைவில் உருவாக்கிக்கொள்வார் என்ற நம்பிக்கை எமக்கிருந்தது.

இந்த அடிப்படையில்தான் நாம் ஆரம்பத்தில் அந்தக் கருத்தைச் சொன்னோம். ஆனால், இந்த விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா தனது நிலைப்பாட்டை தெளிவாக்கிக் கொள்ளாமையால், காலம் இழுபட்டுக்கொண்டு போகிறது.

ஜனாதிபதியின் நிலைப்பாட்டில் தான் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கான காலம், நேரம் எல்லாம் தங்கியுள்ளது.

*கேள்வி:* ஜனாதிபதி நிலைப்பாடு தொடர்பாக அறிந்துகொண்ட பின்னர்தான் பேச்சுவார்த்தை குறித்த நிகழ்ச்சி நிரல் வெளியிடப்படுமா?

*பதில்:* எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் ஒரு நிகழ்ச்சி நிரலை கொடுத்துள்ளோம்.

ஏனெனில், இந்த இரண்டரை வருடங்களில் ஏற்பட்ட பட்டறிவு, அனுபவம் காரணமாகவும் ஏற்கனவே எவ்வளவோ விடயங்களில் இணக்கப்பாடு கண்டும் அதை நடைமுறைப் படுத்தாமை மக்கள் இன்று சமாதான முயற்சிகள் மீது நம்பிக்கையற்றிருக்கும் சூழ்நிலையிர், நாங்கள் ஒரு சமாதான முயற்சியை முன் னெடுக்கின்றபோது, அது ஆக்கபூர்வமானதாகவும், நடைமுறைச் சாத்தியமானதாகவும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் - எமது தலைமைப் பீடம் - தேசியத் தலைவர் நோர்வே வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்தபோது, தெளிவாக்கியுள்ளார்.

அதைத்தான் நாங்கள் மீண்டும் மீண்டும் தெளிவாக்கியுள்ளோம். மீளவும் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் போது, தெளிவான நடைமுறைகள், வெளிப்படுத்தல்கள் ஊடாக பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதில் எமது தலைமைப் பீடம் மிகவும் உறுதியாகவுள்ளது.

நாங்கள் அதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளோம். இன்றைய பேச்சுக்களின் போதும் இதை மிகவும் ஆணித்தரமாகவும், உறுதியாகவும் வலியுறுத்தியுள்ளோம். இதை ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறி ஒரு இணக்கப்பாடான சூழலை ஏற்படுத்துவார்கள் என்றுதான் நாம் நினைக்கிறோம்.

*கேள்வி:* ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்துவிட்டுத்தான் சொல் ஹெய்ம் உங்களிடம் வருவார் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், ஜனாதிபதியைச் சந்திக்காமல் அவர் உங்களிடம் வந்ததாக கூறப்படுகிறது. இது தொடர்பாக உங்கள் கருத்து?

### சந்திப்பை விட சிந்திப்பை விரும்புகிறொம்

*பதில்:* தாங்கள் ஜனாதிபதியினதும் அரச தரப்பினதும் கருத்துக்களைத் தான் கேட்டோம். சந்திப்புக்களைப் பற்றி நாம் ஆராயவில்லை. அரச தரப்பின் நிலைப்பாட்டைத் தான் நாம் கேட்டறிந்தோம்.

உறுதியாகவும், ஆணித்தரமாகவும் எடுத்த எமது நிலைப்பாட்டை ஜனாதிபதியிடம் எடுத்துச்சென்று இது சம்பந்தமான பதில்களை விரைவில் அறிவிப்பதாகக்கூறி சொல் ஹெய்ம் சென்றுள்ளார்.

*கேள்வி:* சமாதான முயற்சிகளில் மீண்டும் தாம் பங்களிக்க வேண்டும் என்றால், அரச கட்சிகளிடையே ஒரு இணக்கப்பாடு எற்பட வேண்டும் என்று நோர்வே கூறியிருந்தது

ஆனால், நோர்வே மீண்டும் பேச்சுவார்த்தையில் நடுநிலையாக செயற்பட வந்துள்ளது. ஜே.வி.பி. தற்போது சமாதானம் தொடர்பாக பெரும் அச்சுறுத்தலைக் கொடுத்திருக்கிறது. மக்களிடையே சமாதானம் தொடாபான நிலைப்பாடு கேள்விக்குரியதாகவுள்ளது. இது பற்றிய உங்கள் கருத்து என்ன?

*பதில்:* மக்கள் மத்தியில் மட்டுமல்ல சகல தரப்பிலும் இப்படியான சந்தேகங்கள் உள்ளன. ஜனாதிபதியின் கூட்டுக் கட்சிகள் பல்வேறு முரண்பாடான கருத்துக்களைக் கொண்டுள்ளன. ஆகவே இதுபற்றி நோர்வே அரசுதான் முடிவு எடுக்க வேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு எவ்வளவு சாத்தியப்பாடான நிலைமைகள் இருக்கின்றன என்பதை நோர்வே ஏற்பாட்டாளர்கள்தான் அனுமானிக்க வேண்டும்.

*கேள்வி:* பேச்சில் ஈடுபடவுள்ள அரச பிரதிநிதிகள் எவ்வாறு இருக்க வேண்டும் என நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

### தீர்வெடுக்கும் அதிகாரம் உள்ள குழுவுடன் மட்டுமே பேச முடியும்

*பதில்:* அரச தரப்பில் பேச்சுவார்த்தையாளர்களாக கலந்து கொள்பவர்கள் அதிகாரம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். அதாவது அமைச்சர் மட்டத்திலான தூதுக்குழுவாக இருக்கவேண்டும் என்பது எமது நிலைப்பாடு.

சமாதான முன்னெடுப்புக்கள், தற்போதைய பிரச்சினைகள் தொடர்பாகவே சொல்ஹெய்முடனான இன்றைய சந்திப்பில் அதிகம் பேசினோம்.

*கேள்வி:* எவ்வாறான இடைக்கால நிர்வாக சபையை எதிர்பார்க்கிறீர்கள்?

பதில்: எமது மக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்திசெய்யக் கூடியதான இடைக்கால நிர்வாகசபையையே நாம் எதிர்பார்க்கிறோம். பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காணக்கூடிய வகையில் இந்த இடைக்கால நிர்வாகசபை எமக்கு வழங்கப்படவேண்டும்.

பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் முன்பாக எம்முடைய சட்டவல்லுநர்கள், ஆய்வாளர்களைக் கூட்டி ஒரு கலந்துரையாடலை நடத்தவுள்ளோம். அதன் முடிவில் சில தீர்மானங்களை எடுத்து அதன் அடிப்படையிலேயே பேச்சுக்களை நடத்தவுள்ளோம். இந்த கலந்துரையாடல் அடுத்த மாதம் இடம்பெறும்.

அரச சார்பற்ற பிரதிநிதிகளுக்கான விசேட கூட்டமொன்றும் அடுத்த மாதமளவில் நடத்தப்பட்டு தற்போதைய அரசியல் சூழல், அபிவிருத்தி தொடர்பாக ஆராயவுள்ளோம்.

பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலையே நாம் தயார்ப்படுத்துகிறோம். எந்தவித நிபந்தனையும் இன்றியே நாம் பேச்சுக்களில் கலந்து கொள்கின்றோம். அவ்வாறே அரசும் கலந்துகொள்ளவேண்டும் நாம் எந்த நிபந்தனையையும் அரசுக்கு விதிக்கப்போவதில்லை.

யதார்த்தபூர்வமான நடைமுறைக்குச் சாத்தியமான விடயங்களையே நாம் முன்வைத்துள்ளோம். அதனை அரசும் ஏற்றுக்கொண்டு பேச்சுக்களில் கலந்துகொள்ளவேண்டும்.

*கேள்வி:* தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்தியா நீடித்திருப்பது குறித்து என்ன கூறுகிறீர்கள்?

தமிழ் மக்கள் இந்தியாவை என்றுமே ஒரு நட்பு நாடாகவே பார்க்கின்றனர். அப்படி இருக்கும்போது, தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்தியா நீடித்திருப்பது ஏமாற்றத்தை அளிப்பதாகவுள்ளது. இந்தியா இந்நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவேண்டும். தமிழருக்கு நல்லதொரு நேசக்கரம் நீட்டவேண்டும் என்பதையே எதிர்பார்க்கிறோம்.


நிரஞ்சனாஸ் சங்கானை
இன்றுமுதல்
பிரபுதேவா, ஆஸிமா, ரகுவரன் நடித்த
அலாவுதீன்
(சி-2386)
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா நடித்த
ஆய்த எழுத்து
(சி-2387)
காட்சிநேரம்:-10.30,2.30,6.30,9.30 (பு.நே)





CATWAS.COM
Computer Academy
உலகநாடுகளில் பிரபல்யம்பெற்று முன்னணியில் இருக்கும் UK Microsoft நிறுவனத்தின் ஆதரவைப் பெற்றதும், அமலமரித் தியாகிகள், அருட்தந்தையர்களின் நெறிப்படுத்தலில் யாழ். மாவட்டத்தில்கணினிப் பயிற்சிகளை பிரபல்யமாக நடத்திவருகின்ற CATWAS.Com A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகளை ஆரம்பிக்கவுள்ளது.
DIPLOMA COURSE
1.Ms Office
2.Desktop publishing
3.Hard ware
4.Wab Page
5.Video Mixing
CERTIFICATE COURSE
Word XP, Excal XP, Access XP, Power Point XP, Page Maker 7, Corel DrawII, PhotoShop 7, Cool 3D, Visual Basic, Studies 8, Premier.
விண்ணப்பங்கள் 10-06-2004 இற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ ஏற்றுக்கொள்ளப்படும்.
கணினியில் ஏற்படும் சகல விதமான திருத்தவேலைகளும் செய்துகொடுக்கப்படும்
(சி - 2590)
T.P- 021 222 3805 26, Somasundaram Aveuu, Cuundikuli, Jaffna.

நாகம்ஸ் சுன்னாகம்
மாதவன், சதா, விவேக் நடித்த
எதிரி
(சி-2397) (றீல்ஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
அருள் திரைப்படத்திற்கான குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட அதிஷ்ட சீட்டிழுப்புக்களின் இலக்கங்கள
முதலாம் பரிசு - 37097
இரண்டாம் பரிசு - 39330
மூன்றாம் பரிசு - 39312
இவ் இலக்க நுழைவுச் சீட்டுக்களை வைத்திருப்பவர்கள் 1.06.2004 இற்கு முன் தொடர்பு கொள்ளவும்.





ASIAN COMPUTERS
மெகா கணனி புலமைப்பரிசில்
முக்கிய அறிவித்தல்
6-6-2004 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த இலவச கணனி புலமைப்பரிசில் பரீட்சை 'மாணவர் தினம்' காரணமாக 5-6-2004 சனிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் நடைபெறும். இதுவரை இலவச அனுமதிகளை பெற்றவர்கள் உடன் எமது யாழ் நகர், சுண்ணாகம் மற்றும் நெல்லியடி பயிற்சி நிலையங்களை தொடர்புகொள்ளவும்.
ASIAN COMPUTER SYSTEMS
யாழ்ப்பாணம்: 2 G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். Tel:021-222 5677
சுண்ணாகம்: பிரசன்னா கொம்ப்யூட்டர்ஸ் K.K.S.வீதி,சுண்ணாகம்.
நெல்லியடி: கொடிகாமம் ரோட், நெல்லியடி. (கரவெட்டி தபாலகத்திற்கு முன்பாக)

## சமாதானப் பேச்சுக்களின் போது

# முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தும் குழு தனித்தரப்பாக பங்குபற்ற வேண்டும்

### அமைச்சர் பேரியல்அஷ்ரப் கோரிக்கை



விடுதலைப்புலிகளுக்கும்- அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக முஸ்லிம் குழுவொன்று தனித்தரப்பாகப் பங்குபற்றவேண்டுமென, வீடமைப்பு நிர்மாணத்துறை, கிழக்கு மாகாணக் கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சர் பேரியல் அஷ்ரப் கோரிக்கை விடுத்தார்.

நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளில் சிறிய ஒரு குழுவாகவுள்ள முஸ்லிம் கட்சியொன்று பங்கேற்பதால், முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வந்துவிடாது.

நடந்து முடிந்த பேச்சுவார்த்தைகளில் தனியனாக ஒரு கட்சி மட்டும் கலந்துகொண்டு ஒரு எல்லைக்குட்பட்ட வகையில் அரசியல் விடயங்களே பேசப்பட்டன.

முஸ்லிம்களின் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி விளங்கிக் கொண்டுள்ளார் எனவும், எனவே எதிர்கால சமாதானப் பேச்சுவார்த்தைகளை அவர் அதற்கேற்ற வகையில் நடப்பார் எனவும் பேரியல் அஷ்ரப் தெரிவித்தார்.

## மாகாண சபைகளுக்கான தேர்தலில்

# 73 வேட்பாளர்களை ஜே.வி.பி. நிறுத்தவுள்ளது

நடைபெறவுள்ள ஆறு மாகாண சபைகளுக்குமான தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் 73 வேட்பாளர்களை ஜே.வி.பி நிறுத்தவுள்ளது.

இதன்படி மத்திய மாகாண சபைக்கான தேர்தலில் பத்து வேட்பாளர்களும், ஊவா மாகாணசபைக்கான தேர்தலில் இருவர் ஐக் கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பட்டியலிலும் போட்டியிடவுள்ளனர்.

மேல்மாகாணசபைத் தேர்தலில் 23 பேரும், சப்ரகமுவ மாகாண சபைக்கு பத்துப்பேரும், தென் மாகாண சபைக்கு பதினைந்து பேரும் வடமத்திய மாகாண சபைக்கு எட்டுப்பேரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிடவுள்ளனர்.

மேல் மாகாண சபைக்கான தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஒன்பது பேரும், கம்பஹாவில் எடடுப்பேரும், களுத்துறையில் ஆறு பேரும் போட்டியிடவுள்ளனர்.

தென் மாகாண சபைக்கான தேர்தலில் - காலியில் ஆறு பேரும, மாத்தறையில் ஐந்துபேரும், அம்பாந்தோட்டையில் நான்குபேரும் போட்டியிடவுள்ளனர்.

சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலில் ஐவர் போட்டியிடவுள்ளனர். இதில் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்கள் அடங்குகின்றன.

அநுராதபுரத்தில் ஐந்துபேர் மற்றும் பொலநறுவை மூவர் என வட மத்திய மாகாண சபைக்கான தேர்தலில் ஜே.வி.பி. சார்பாகப் போடடியிடவுள்ளனர்.

### புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டுநாள் பயிற்சி வகுப்பு

நாடாளுமன்றத்தின் அனைத்துப் புதிய உறுப்பினர்களுக்கும் இரண்டு நாள் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் சட்டதிட்டங்கள் நிலையியல் கட்டளைகள் மற்றும் பிற விடயங்கள் தொடர்பாக அறிந்துகொள்ளும் வகையிலேயே இந்தப் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றத்தில் அண்மையில் நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கான கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ரயில்வே அதிகார சபை திணைக்களமாக மாற்றம்

தற்போது நடைமுறையிலுள்ள ரயில்வே அதிகாரசபை விரைவில் கலைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் படி பழைய நிலையிலுள்ள மாதிரி ரயில்வே அதிகார சபை கலைக்கப்பட்டு, ரயில்வே திணைக்களமாக மாற்றப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

ரயில்வே சேவைகளின் பாதுகாப்பு மற்றும் தேவைகளுக்காக அரசாங்கம் மாதம் ஒன்றுக்கு 350 மில்லியன் ரூபாய்களை தற்போது செலவு செய்து வருகின்றது.

ரயில் நிலையங்களை நவீனமயப்படுத்த உள்ளதாகவும் ரயில் சேவை இந்தியாவுடன் நடத்தவுள்ளதாகவும் இது தலைமன்னாருக்கு ஊடானதாக இருக்குமெனவும் போக்குவரத்து அமைச்சர் பெரேரா மேலும் தெரிவித்தார்.

# கோதுமை மாவின் விலை வெள்ளி முதல் அதிகரிப்பு!

(கொழும்பு)

கோதுமை மாவின் விலை நாளை வெள்ளிக்கிழமை முதல் 4 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

தற்போது கிலோ 22 ரூபாவாக விற்பனைசெய்யப்படும் கோதுமை மாவின் விலை 26 ரூபாவாக உயர்த்தப்படலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. உலக சந்தையின் நிலவரப்படி, மாவின் விலை 31 ரூபாவரை உயர்த்தமுடியும் எனினும், இலங்கை மக்களின் நலன் கருதி ரூபா 26.40 சதத்திற்கு விற்பனை செய்யமுடிவுசெய்துள்ளதாகவும் பிறிமா நிறுவனம் தெரிவித்துள்ளது.

கோதுமை மாவின் விலையை 22 ரூபாவாக நடைமுறைப்படுத்த வேண்டுமானால், அரசாங்கம் 482 மில்லின் ரூபாவை உடனடியாக பிறிமா நிறுவனத்திற்கு மானியமாக வழங்கவேண்டும்.

எனினும் அரசாங்கம் இத் தொகையை வழங்க முன்வருமா என்பது தொடர்பில் இதுவரை தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. இதனால், பெரும்பாலும், நாளை வெள்ளிக்கிழமை முதல் கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது. (01)

# திலங்க சுமதிபாலவின் வழக்கிலிருந்து விலகிக்கொள்வதாக நீதிபதி அறிவிப்பு!

(கொழும்பு)

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால தாக்கல் செய்திருந்த பிணைமனுவை விசாரணை செய்த மேல் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிமல் காமினி அமரதுங்க இந்த வழக்கு விசாரணையிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

பிணை மனுவை விசாரிப்பதற்கு மேல் முறையீட்டு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டா, இல்லையா என்பது தொடர்பாக நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்க இருந்தவேளையில், இந்த மாற்றம் நிழ்ந்தது.

நீதியரசர் நிமல் காமினி அமரதுங்க இந்த வழக்கை விசாரிப்பதை தமது கட்சிக்காரர் விரும்பவில்லை என்று, திலங்க சுமதிபால தரப்பில் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார்.

இதனையடுத்து விசாரணை நடத்துவதிலிருந்து நீதியரசர் நிமல் காமினி அமரதுங்க விலகிக்கொண்டுள்ளார். இந்த வழக்கின் ஆவணங்களை மேல் முறையீட்டு நீதிமன்ற தலைவருக்குச் சமர்ப்பிக்குமாறு, நீதிமன்ற பதிவாளருக்கு நீதியரசர் உத்தரவிட்டார்.

தாம் அங்கம்வகிக்காத நீதியரசர் குழுவொன்றின் மூலம் விசாரணைகளை நடத்த ஏற்பாடு செய்யுமாறு, அவர் மேல் முறையீட்டு நீதிமன்றத் தலைவரைக் கேட்டுள்ளார். இதற்கு முன்னர் இந்த மனுவை விசாரணை செய்த நீதியரசர் சந்திரதாஸ நாணயக்காரவும் விசாரணையிலிருந்து ஒதுங்கிக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழான குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் கைதுசெய்யப்பட்டு, கடந்த ஜனவரி 19 ஆம் திகதிமுதல் திலங்க சுமதிபால விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாகாணசபைகளுக்கான தேர்தலை ஒரேநாளில் நடத்துவதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

ஆறு மாகாண சபைகளுக்கான தேர்தல் ஒரே நாளில் அதுவும் ஒரு சனிக்கிழமை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கு, தெற்கு, சப்ரகமுவ, ஊவா, மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களுக்கான தேர்தலே சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவினை மேற்கோள்காட்டும் செய்திகளின் படி இந்தமாதம் 28 ஆம் திகதி முடிவடையவுள்ள வேட்புமனுத்தாக்கலின் பின்னர் ஆறு மாகாண சபைகளுக்குமான தேர்தலின் திகதியை அறிவிப்பார் எனத் தெரியவருகிறது.

இதனிடையே மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன் அப்பகுதியிலுள்ள அரசியற்கட்சிகளின் விளம்பர பதாகைகள், கட் அவுட்டுக்கள், விளம்பர சுவரொட்டிகள் போன்றவற்றை அகற்றுமாறு தேர்தல் ஆணையாளர் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

## சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவராக நிஹால் சிறி அமரசேகர நியமனம்

அரச நிறுவனங்களின் சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவராக பட்டயக் கணக்காளரும், முகாமைத்துவ ஆலோசகருமான நிஹால் சிறி அமரசேகராவை ஜனாதிபதி சந்திரிகா நியமித்துள்ளார்.

நிஹால் சிறி அமரசேகரா நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுகந்திர முன்ணிக்கு ஆதரவாக பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டவராவார்.

கடந்த ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்காலத்தின் போது நிதியமைச்சராக இருந்த கே.என். சொக்ஸிக்கு ஆதரவாக ஹில்டன் ஹோட்டல் விவகாரம் தொடர்பாக மனு ஒன்றை இவர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார்.



நேற்று யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்த உலக உணவு ஸ்தாபன பிரதிநிதிகள் யாழ்.செயலகத்தில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளரைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

படம் - தீபன்.

## 1040 சிறுவர்களின் தேவைகள் இனங்காணல்

திருக்கோணமலை மாவட்டத்தில் 18 வயதுக்கு குறைந்தவர்களில் 1040 பேர் விசேட தேவையுள்ள சிறுவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி சங்கம் மேற்கொண்ட ஆய்வின்போது இவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் அநேகமானோர் கால் பாதிப்புக்குள்ளானவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது. பட்டணமும சூழலும் பிரதேச செயலாளர் பிரிவிலேயே அதிகமான சிறுவர்கள விசேட தேவையுள்ள விளங்குகின்றனர். (04)

## பல்கலைக்கழக ஊழியர்களுக்கு

# இடைக்காலக் கொடுப்பனவுகளை வழங்க திறைசேரி அங்கீகாரம் வழங்கியுள்ளது!

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களுக்கான இடைக்காலக் கொடுப்பனவுகள் வழங்குவதற்கு திறைசேரி அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த ஊழியர்கள் சம்பள ஏற்றத்தாழ்வுகளை நீக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

அந்தக் கோரிக்கைகளை ஏற்று, முரண்பாடுகளை நீக்குவதற்காக திறைசேரி நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக அணிசாரா ஊழியர்களுக்கு மாதாந்தம் 1150 ரூபா இடைக்காலக் கொடுப்பனவாக வழங்கியிருந்தது.

கடந்த சில வருடங்களாக வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவுகளை முன்னைய அரசினால் நிறுத்தியிருந்தது. தற்போதைய அரசாங்கம் கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தியது. இதன்போது கல்வி விடுத்த வேண்டுகோளை அடுத்து திறைசேரி இடைக்கால படியை வழங்க இணங்கியுள்ளது.

# பாலியல் நடத்தைக்காக சிறுவர்களை விற்ற குழுவொன்று கொழும்பில் பொலிஸாரால் கைது

இன்ரநெற் மூலம் சிறுவர்களைப் பாலியல் நடத்தைக்காக விலைபேசி விற்றுவந்த கும்பலொன்று கொழும்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை தேசிய சிறுவர் பாதுகாப்புக்குழுவின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திரசில்வா நேற்று முன்தினம் வெளியிட்டார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது -

இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களைக் கடத்திவந்து, அவர்களின் படம் மற்றும் விபரங்களை வெளிநாட்டிலுள்ளவர்களுக்குப் பாலியல் அடிமைகளாக விற்பனை செய்த 40 பேர் அடங்கிய கும்பலொன்று கொழும்புப் பொலிஸாரால் பிடிக்கப் பட்டுள்ளது.

இந்தக் குழுவில் அமெரிக்கா, ஜேர்மன், ஹொலண்ட் முதலான நாடுகளைச் சேர்ந்த நான்கு பேரும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களால் பிடிக்கப்பட்ட 13-16 வயதுக்குட்பட்ட 10 பிள்ளைகளை மீட்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுவருகின்றனர்.

இவர்கள் மீதான விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும், விரைவில் மேலும் பல உண்மைகள் வெளிவரும் எனவும் பொலிஸார் தெரிவித்தார். (ப)

# அவுஸ்ரேலியா 7 விக்கெட்டுக்களால் சிம்பாப்வே அணியைத் தோற்கடித்தது!

அவுஸ்ரேலிய - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் ஹராரேயில் நடந்த முதலாவது ஒருநாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 7 விக்கெட்டுக்களால் சிம்பாப்வே அணியைத் தோற்கடித்தது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற சிம்பாப்வே அணி - முதலில் துடுப்பெடுத்தாடியது. இந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது.

இவ்வணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரெய்லர் 59 ஓட்டங்களையும் (இது இவரது 2 ஆவது அரைச்சதம்), அணித்தலைவர் தைபு 57 ஓட்டங்களையும் பெற்றனர். மற்றைய வீரர்கள் எவரும் பெரிதாக சோபிக்கவில்லை.

பந்துவீச்சில் ஜிலெஸ்பி, கஸ்பரோவிஷ் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும், மக்ரா, லீமன் மற்றும் வில்லியம்ஸ் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 39.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்று வெற்றியடைந்தது.

இந்த அணி சார்பாக அணித்தலைவர் பொன்டிங் 93 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகள் அடங்கலாக 93 ஓட்டங்களை ஆட்டமிழக்காமலும், மார்ட்டின் ஆட்டமிழக்காமல் 74 ஓட்டங்களும் எடுத்தனர்.



மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் அவுஸ்ரேலியா 1:0 என்ற நிலையில் முன்னிலையில் உள்ளது. இரண்டாவது போட்டி இன்று நடைபெறுகிறது.

சிம்பாப்வே அணியில் கறுப்பினத்தைச் சேர்ந்த வீரர்கள் பெருமளவில் புதுமுகமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அணி முதன்முறையாக பங்களாதேஷ் செல்கின்றது!

(டாக்கா)

இவ்வருட இறுதியில் முதன் முறையாக இலங்கை அணி பங்களாதேஷ் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையேயான 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் இவ்வருடக் கடைசியில் நடைபெறவுள்ளது. இலங்கை அணி பங்களாதேஷ் செல்வது இதுவே முதல்முறையாகும்.

3 வார கால பயணமாக வரும் நவம்பர் மாதம் இலங்கை அணி பங்களாதேஷ் செல்கிறது.

இந்தத் தொடரில் வரும் நவம்பர் மாதம் 10, 11 ஆம் திகதிகளில் ஒருநாள் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் டாக்காவில் நடைபெறவுள்ளன. மூன்றாவது ஒருநாள் போட்டி நவம்பர் 14 ஆம் திகதி சிட்டகொங்கில் நடைபெறவுள்ளது.

இரு அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி நவம்பர் 18 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரை சிட்டகொங்கில் நடைபெறவுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையேயான இரண்டாவது டெஸ்ட் போட்டி டாக்காவில் நவம்பர் 25 முதல் 29 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இலங்கை அணியின் பங்களாதேஷ் பயணம்

நவம்பர் 10 - முதல் ஒருநாள் போட்டி (பகல்/இரவு - டாக்கா)

நவம்பர் 11 - இரண்டாவது ஒருநாள் போட்டி (பகல் இரவு - டாக்கா)

நவம்பர் 14 - மூன்றாவது ஒருநாள் போட்டி- சிட்டகொங்

நவம்பர் 18 - 22 முதல் டெஸ்ட் போட்டி - சிட்டகொங்

நவம்பர் 25 - 29 - இரண்டாவது டெஸ்ட் போட்டி - டாக்கா




# விறுவிறுப்பாக நடைபெறுகின்ற பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டிகள்



பிரெஞ் ஓபன் ரெனில் விறுவிறுப்புத் தொடர்கிறது. ரோஜர் பெடரர், மேரி பியர்ஸ், வில்லியம்ஸ் சகோதரிகள் உள்ளிட்ட முன்னணி ரெனிஸ நட்சத்திரங்கள் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நகரில் பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் நடந்த போட்டிகளில் - தரவரிசையில் முதலிடத்திலிருக்கும் சுவிற்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

தர வரிசையில் 110 ஆவது இடத்திலிருக்கும் பெல்ஜியம் வீரர் கிறிஸ்ரோ விவிஜெனை சந்தித்தார் பெடரர். ஒரு மணி நேரம் 16 நிமிட நேரம் நீடித்த இந்தப் போட்டியை 6:1, 6:2, 6:1 என்ற செட் கணக்கில் பெடரர் வென்றார். மற்றொரு போட்டியில் ஜேர்மன் வீரர் நிக்கலஸ் கீபர் 6:3, 6:2, 6:2 என்ற செட்களில் பிரான்ஸ் வீரர் தியரி ஆஸியோனை வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

அடுத்த சுற்றில் பெடரரைச் சந்திக்கிறார் கீபர். கடந்த ஆண்டு இறுதிப் போட்டி வரை முன்னேறிய ஹொலன்ட் வீரர் மார்ட்டின் வெர்கெர்க் 7:5, 6:3, 6:1 என்ற செட்களில் பிரான்ஸ் வீரர் ஜுலியன் பாட்டரை வீழ்த்தினார். பிரான்ஸ் வீரர் பேப்ரைஸ் சான்டோரா 6:4, 6:3, 6:7, 3:6, 16:14 என்ற செட் கணக்கில் பெரும் போராட்டத்திற்குப் பிறகு தனது சக நாட்டு வீரர் ஆர்னட் கிளமென்டை வீழ்த்தினார்.

பெண்கள் பிரிவில் - பிரான்ஸ் வீராங்கனை மேரி பியர்ஸ் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார். நேற்று நடந்த போட்டியில் பியர்ஸ் 6:2, 6:3 என்ற நேர் செட்களில் லக்ஸம்பேர்க்கின் கிளாடின் ஸ்காலை சுலபமாக வீழ்த்தினார்.

ஸ்பெயின் வீராங்கனை காலா லியோன் கார்சியா 6:4, 6:1 என்ற சுலப செட்களில் அமெரிக்காவின் லாரா கிரான்வெல்லியை வென்றார். அடுத்த சுற்றில் பியர்ஸை சந்திக்கிறார் கார்சியா.

அமெரிக்காவின் வில்லியம் சகோதரிகள் இருவரும் தங்கள் முதற் சுற்று ஆட்டத்தில் வெகு சுலபமாக வென்றனர். செரீனா வில்லியம்ஸ் 6:2, 6:2 என்ற நேர் செட்களில் செக் குடியரசின் வீராங்கனை இவிதா பெனிசோவை வீழ்த்தினார்.



வீனஸ் வில்லியம்ஸ் 6:2, 6:4 என்ற நேர் செட்களில் தாய்லாந்தின் தாமரைன் தானசுகர்னை வென்றார்.

# இங்கிலாந்து கிளப்பில் சமி விளையாடவில்லை!

பாகிஸ்தான் அணியின் முன்னணி வேகப் பந்துவீச்சாளர்களில் ஒருவர் முகமது சமி. இவர் இங்கிலாந்தில் உள்ள கென்ட் கிளப்பில் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டார். அதே நேரத்தில் ஆசியக்கோப்பை போட்டியும், ஹொலந்தில் 3 நாடுகள் போட்டியும் நடக்கிறது. இதனால் கவுண்டி கிளப்பில் அவர் ஆடவில்லை. கிளப் போட்டியை விட அவர் நாட்டுக்கு முககியத்துவம் கொடுத்துள்ளார்.

ஆசியக்கோப்பை போட்டி ஜுலை 15 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் முதலாம் திகதி வரை இலங்கையிலும், இந்தியா, பாகிஸ்தான், அவுஸ ரேலியா ஆகிய 3 நாடுகள் போட்டி ஹொலந் திலும் நடக்கிறது. இந்தப் போட்டியில் ஆடவேண்டியிருப்பதால் சமி கென்ட் கிளப்பில் இருந்து விலகியுள்ளார்.



# மேற்கிந்தியத் தீவுகள் அணியில் மீண்டும் லோசன் இணைப்பு!



(செயின்ட் ஜோன்ஸ்)

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டிக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியில் ஜெர்மைன் லோசன் இடம்பெற்றுள்ளார்.

பங்களாதேஷ் - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையேயான 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் முதல் போட்டிக்கான 13 பேர் கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் டெஸ்ட் போட்டி நாளை தொடங்குகின்றது.

பந்துவீச்சு குறித்து ஏற்பட்ட புகாரின் காரணமாக கட்ந்த ஆண்டு மே மாதம் முதல் லோசன் எந்தப் போட்டிகளிலும் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு அவுஸ்ரேலியாவுக்கு எதிராக செயின்ட்ஜோன்சில் நடைபெற்ற போட்டியின்போது போட்டி நடுவர்களாக இருந்த டேவிட் ஷெபேபர்ட், வெங்கட்ராகவன் இருவரும் லோசனின் பந்துவீச்சு குறித்து புகார் செய்தது குறிப்பிடத்தக்கது.

இதுவரை 7 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 29 விக்கெட்டுக்களை லோசன் வீழ்த்தியுள்ளார். பங்காளதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டிக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியில் அறிமுக வீரராக ராம்பவுல் இடம்பெற்றுள்ளார். பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில் விளையாடாத மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் லாரா டெஸ்ட் தொடரில் விளையாட அணிக்குத் திரும்பியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளில் பங்களாதேஷ் அணி விளையாடும் முதல் டெஸ்ட் போட்டி இதுவாகும். இரு அணிகளுக்கும் இடையேயான 2 ஆவது டெஸ்ட் போட்டி அடுத்தமாதம் 4 ஆம் திகதி கிங்ஸ்டனில் நடைபெறவுள்ளது.

டெஸ்ட் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி விபரம் -

பிறைன் லாரா (கப்டன்), சர்வான், டினோ பெஸ்ட், சந்தர்போல், பெட்ரோ கொலின்ஸ், பிடல் எட்ர்வட்ஸ், கிறிஸ் கெய்ல், ரிட்லி ஜேக்கப்ஸ், டேவ் முகமட், ரவி ராம்பவுல், டேவோன் ஸ்மித், ட்வைன் ஸ்மித்.

## சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து

# ஓய்வு பெறுவது தொடர்பாக பரிசீலிக்கிறாராம் ஹுசைன்

(லண்டன்)

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவது குறித்து பரிசீலனை செய்துவருவதாக இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் நசார் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகளுக்கிடையில் டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்து முடிந்தது.

இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. இந்தப் போட்டியின் இரண்டாவது இனிங்ஸில் ஹுசைன் அபாரமாக சதம் அடித்து இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு உதவினார்.

ஹுசைன் 103 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்த நிலையில் பத்திரிகையாளர்களைச் சந்தித்து ஹுசைன் - டெஸ்ட் கிரிக்கெட்டில் எதிர்காலம் குறித்து இன்னும் ஓரிரு நாட்களில் முடிவு எடுக்கவிருப்பதாகக் கூறினார்.

இது குறித்து ஹுசைன் அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது-

என்னுடைய வாழ்வில் சில முடிவுகளை எடுக்க முடிவெடுத்துள்ளேன். கிரிக்கெட் வாழ்வு குறித்த எனது முடிவை அடுத்த 24 முதல் 48 மணி நேரத்தில் எடுக்கவுள்ளேன் என்று கூறினார்.

டெஸ்ட் போட்டிகளில் 100 போட்டிகளை எட்ட இன்னும் 4 போட்டிகளில் ஹுசைன் விளையாடவேண்டியுள்ளது.

அன்ரூ ஸ்ட்ராஸ் போன்ற இளம் துடுப்பாட்ட வீரர்களுக்கு குறுக்கே நிற்க விரும்பவில்லை என்றும் இதனால் ஓய்வு குறித்து பரிசீலனை செய்து வருவதாகவும் ஹுசைன் தெரிவித்தார்.

காயமடைந்த இங்கிலாந்து அணித்தலைவர் வோகனுக்குப் பதிலாக நியூஸிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் களமிறங்கிய இளம் வீரர் ஸ்ட்ராஸ் முதல் இனிங்ஸில் 112 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்ஸில் 83 ஓட்டங்களையும் எடுத்தார்.

இதனால் ஹெடிங்லேயில் வரும் மூன்றாம் திகதி நடைபெறவிருக்கும் இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணியை தேர்வு செய்வதில் தேர்வுக்குழுவுக்கு பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது.

தன்னுடைய ஓய்வு குறித்து ஏற்கனவே இங்கிலாந்து பயிற்சியாளர் டங்கன் பிளட்சரிடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பரிசீலனை செய்துவிட்டதாகவும் ஹுசைன் தெரிவித்தார்.



ஓய்வு பெறுவதற்கு எது சிறந்த நாளென்பது குறித்து தனது தந்தை, குடும்பத்தினருடன் ஆலோசனை செய்யவுள்ளேன். நடைபெற்றுக்கொண்டிருக்கும் நியூஸிலாந்துக்கு எதிரான தொடரின் மத்தியில் நான் வெளியேற விரும்பவில்லை.

நியூஸிலாந்து அணியை வீழ்த்த வேண்டும். ஆனால், டெஸ்ட் போட்டிகளில் நீடிக்க நான் விரும்பவில்லை. எல்லோரும் நான் 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாட வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் சிலர் விரும்பவில்லை. நான் அணித் தலைவராக இருந்தபோது இதுதான் நடந்தது என்று ஹுசைன் கூறினார்.

## வலய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் ஜுன் மாதம் 10, 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதற்கான முன்னேற்பாடுகளை வலய விளையாட்டு அதிகாரியும், உயர்கல்விப் பணிப்பாளருமான அருணகிரிராஜா மேற்கொண்டுள்ளார்.

துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்கள் பெறும் வீர, வீராங்கனைகள் திருமலையில் இடம்பெறும் இறுதி மாகாண மெய்வல்லுநர் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுவர்.

(205)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# புலிகளின் நேசக்கரத்தை சிங்களதேசம் தட்டினால் தமிழருக்கான தனியரசு உருவாவதை தடுக்கமுடியாது

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசன் தெரிவிப்பு

தமிழ் இனத்தின் பிரச்சினைக் கான பேச்சுவார்த்தைக்கு விடுத லைப் புலிகள் நீட்டும் நேசக் கரத் தைச் சிங்களதேசம் உதறித்தள்ளு வார்களேயானால், தமிழ்மக்களுக் கான தனியரசு உருவாவது தவிர்க் க முடியாததொன்றாகிவிடும்.

இவ்வாறு வட. அல்வாயில் பதி தாக நிர்மாணிக்கப்பட்ட மகாத்மா சனசமூக நிலையக் கட்டடத்தையும், நூல் நிலையத்தையும் திறந்து வைத்துப்பேசிய யாழ்.மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் சி.சிவனேசன் தெரிவித்தார்.

இந்தத் திறப்புவிழா சென்ற- சனிக்கிழமை நடைபெற்றது. விழா விற்கு கி.அருமைத்துரை தலைமை வகித்தார். நாடாளுமன்ற உறுப்பி னருடன் பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார், வல் வெட்டித்துறை நகரசபைச் செயலா ளர் கனகசபாபதி, முன்பள்ளி உத விக்கல்விப் பணிப்பாளர் துரை.சத் தியசீலன், வடமராட்சி மாவீரர் துயி லும் இல்லப் பொறுப்பாளர் தமிழர சன், வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த செபஸ்தியான ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து பேசிய அவர்- இந் தப் பகுதிமக்கள் கல்வியிலும், பொருளாதாரத்திலும் மிகவும் பின் தங்கியவர்கள் என்று எண்ணப்பட்ட வர்களாயினும் இன்று விழிப்புப் பெற்ற மக்கள் என்று மற்றவர்கள் கருதுமளவுக்கு இந்த சனசமூக நிலையமும், நூல் நிலையமும், எழுச்சிபெற்று நிற்பதையிட்டு நான் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த தேர்தலின்போது, இந்தப் பகுதி எனது துறைசார்ந்த மக்கள் எப்படியென்னை நாடாளுமன்ற உறுப்பினராக்கவேண்டும் என்று உளப்பூர்வமாக தம் வாக்குகளை அளித்தார்களோ, அப்பொழுதே அவர்களின் கல்வி, பொருளாதார அபிவிருத்திக்குத் தம்மை முழுமை யாக ஈடுபடுத்திவிட்டார்கள் என்பது வெளிப்படை.

எமது மக்கள் ஒவ்வொருவரும் எமது மண்ணில் அடக்குமுறையற்ற விடுதலை பெற்ற மக்களாக வாழவேண்டும் என்பதற்காகவே தம் இன்னுயிரை இந்த மண்ணுக்கு ஈந்தனர். விடுதலைப் புலிகள் -அந்த விடுதலை, உரிமை மறுக்கப்பட்ட மக்களை பல்திசைநோக்கியவாறு அடித்தளமிட்டே எமது தலைவர் வழிநடத்திச் செலுத்துகின்றார். வேட் பாளர் பட்டியலில் என்னை இடம் பெறவைத்து என்னை நாடாளுமன்ற உறுப்பினர் ஆக்கப்பட்டதும் அந்தக் கண்ணோட்டத்திலேதான்.

விடுதலை என்பது, ஆயுதபலத் தால் மட்டும் அடைவதல்ல. அவை அறிவியல் ரீதியாக அணுகுவதன் மூலமே பெறமுடியும். எமது மக்க ளின் விடுதலை என்பது வாழ்க்கைப் பிரச்சினை. கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் என்னும் துறைக ளின் வளர்ச்சிப் படியை நோக்கி யது. இவை நிறைவுபடுத்தப்பட வேண்டும்.அவற்றையடைய நாம் அறிவியல் ரீதியாக எம்மை வளர்த் தெடுக்கவேண்டும்.



எனது துறைசார்ந்த மக்களின் வாக்குப்பலம்கண்டு தலைவர் தனது வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கின் றார். அவரின் வாழ்த்துக்குரியவர்க ளாக என்றும் வாழவேண்டியது எமது பொறுப்பு.

போரின் கோரச்செயலால் புலம் பெயர்ந்துவாழும் எம்மக்கள் தம் தாய் நாட்டையும், தாம் பிறந்து தவழ்ந்த மண்ணையும், மறக்கமாட் டார்கள் என்பதற்கு, புலம் பெயர்ந்த மகாத்மா ஐரோப்பிய ஒன்றியத்தினர் இந்தச் சனசமூக நிலையத்திற்கு வழங்கிய பாரிய நிதியுதவி நல்ல தோர் உதாரணமாகும்.

எனவே, இந்தக் கிராம மக்க ளின் அடிப்படைத் தேவைகளைக் கண்கூடாகக் கண்டநானும் என்னால் ஆனமட்டும் மேம்பாடு அடைவதற் கான முழுமுயற்சியையும் உங்கள் பொருட்டுச் செய்வேன் என உறுதிப டக்கூறுகின்றேன் எனத் தெரிவித்தார். (13)

## இலவசபாடநூல்கள் டிசம்பருக்கு முன்னர் வழங்கப்படும்

(ஆழியவளை)

அடுத்த ஆண்டிற்கான இலவச பாடநூல்கள் இவ்வருடம் டிசெம்பர் மாதத்திற்கு முன்னர் வழங்கப்படு மென கல்வி அமைச்சர் தெரிவித்துள் ளார்.

215 வகையான பாடப் புத்தகங் களில் 1 கோடி 40 இலட்சம் பிரதி கள் அச்சிடப்படவுள்ளதாகவும், இதற்கு 43 கோடி ரூபாவுக்கும் அதி கமான பிரதிகள் அச்சிடப்படவுள்ள தாகவும், இதற்கு 43 கோடி ரூபா விற்கும் அதிகமான பணம் செலவா கும் எனவும் அவர் தெரிவித்தார்.

தரம் 7 மாணவர்களுக்கென குடி யியல், வரலாறு, புவியியல், ஆகிய பாடப் புத்தகங்களும் அச்சிடப்பட வுள்ளன. (122)

## வகுப்பறைக்கட்டட திறப்புவிழா

(ஆழியவளை)

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் புதிய வகுப்பறைக் கட்டடத்திறப்பு விழா நாளை காலை 10 மணிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவித் தலைவர் லிக் குன் ஜின் திறந்து வைக்கவுள்ளார்.

கல்லூரி அதிபர் ந.அரியரத்தி னம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நிகொட் நிறுவன அதிகாரிகள் மற்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கட்டடத்தை அமைப்ப தற்கு நிகொட் நிறுவனம் 48 லட்சம் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (122)

# மடத்தடிப்பகுதி விபத்துக்கு கவனமின்மையே காரணமாம்

## பொலிஸாரின் விசாரணை அறிக்கை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்தவருடம் யாழ்.மடத்தடிப் பகுதியில் நடைபெற்ற விபத்துக்கு மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த நபர்களின் கவனயீனமே கார ணமென பொலிஸ் விசாரணை அறி விக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மடத்தடிப் பகுதி யில் இராணுவ 'ட்ரக்' வண்டி மோதியதில் இரண்டு இளைஞர்கள் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

இது தொடர்பான விசார ணையை யாழ்.பொலிஸ் நிலையத் தைச் சேர்ந்த விசாரணை அதிகாரி யான சேனாரத்ன மேற்கொண்டு, நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றத் தில் தமது அறிக்கையைச் சமர்ப்பித் திருந்தார்.

அந்த அறிக்கையில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களிடம் சாரதி அனுமதிப்பத்திரம் இருக்கவில்லை எனவும், அவர்கள் கவனமின்றி வாகனத்தைச் செலுத்தியதாலேயே இராணுவ ட்ரக்குடன் மோதநேர்ந்த தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வழக்கில் சாட்சியமளித்த பெற்றோல் விநியோக நிலைய ஊழியர் ஒருவர் இராணு வத்தால் அச்சுறுத்தப்பட்டதாக நீதி மன்றத்துக்குத் தெரிவித்திருந்தார்.

இதுபோன்ற விடயங்களில் இரா ணுவத்தினர் ஈடுபடக்கூடாது என யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் எச்சரிக்கை விடுத்ததாகவும், தெரிவிக்கப்படுகி றது. (ப)

## கும்பாபிஷேகம்

(வடமராட்சி)

அல்வாய் வேல்விலந்தை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான வருடாந்த மஹாகும்பாபிஷேகத்தின் பாற்குடப்பவனியும், 1008 சங்கா பிஷேகமும் எதிர்வரும் புதன்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள் ளது.

## சாவகச்சேரி நகரப்பகுதியில்

# ஐந்து முஸ்லிம்களின் வீடுகளில் மீள்குடியமர படையினர் அனுமதி

உயர்பாதுகாப்பு வலயம் அமைந் துள்ள சாவகச்சேரி நகரையண்டிய கரையோரப்பகுதியிலிருந்த முஸ்லிம் களின் ஐந்து வீடுகளை, மீள அவர் களிடம் படையினர் கையளித்துள் ளனர்.

1990 ஆம் ஆண்டு யாழ். குடா நாட்டிலிருந்து வெளியேறிய முஸ் லிம் குடும்பங்களில் சில மீளக்குடிய மர சாவகச்சேரி பகுதிக்கு திரும் பியிருந்தபோதிலும், அவர்களின் 8 இற்கும் அதிகமான குடியிருப்புக் களில் தொடர்ந்தும் படையினர் நிலை கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் தமது வீடுக ளில் மீளக்குடியமராத நிலையில், அந்தக் குடும்பங்கள் சாவகச்சேரி தனங்களப்பு வீதியிலுள்ள 'ஜும்மா' பள்ளிவாசலில் தங்கியிருந்தனர்.

இது தொடர்பான செய்திகள் வெளியாகியதை அடுத்தே, உயர் பாதுகாப்பு வலயப்பகுதியினுள் அமைந்துள்ள அவர்களது ஐந்து வீடு களில் அவர்களை மீளக்குடியமர படைத்தரப்பு அனுமதித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை தென்ம ராட்சி பிரதேச செயலக அதிகாரிகள் முன்னிலையில் 53 வது படையணி அதிகாரிகள் இந்த வீடுகளை முஸ் லிம் குடும்பங்களிடம் கையளித்த னர்.

இதையடுத்து சாவகச்சேரி, தனங களப்பு வீதியிலுள்ள புகையிரதப் பாதைக்கு அப்பால் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள இந்த வீடுகளில் அந்தக் குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன.

எனினும், இந்தக்குடும்பங்கள் இரவுவேளைகளில் வீடுகளில் இருந்து வெளியே செல்லமுடியா தென அறிவித்துள்ள படையினர், தமது வீடுகளுக்கு தனங்களப்பு வீதியிலுள்ள இராணுவ சோதனைச் சாவடியூடாகவே செல்லமுடியும் என வும் அறிவித்துள்ளனர். (202)

## தேர்தல் கடமைக்கான

# கொடுப்பனவுகள் வழங்குவதில் அரச அதிபர் பின்னடிப்பு

## வன்னி எம்.பிக்கு கடிதம்

நடைபெற்று முடிந்த நாடாளு மன்றத் தேர்தலில் முல்லைத்தீவு மற்றும் வவுனியா - நெடுங்கேணிப் பிரதேசம் போன்ற இடங்களிருந்து வாக்காளர்களை ஏற்றி ஓமந்தைப் பகுதியில் வாக்களிக்க இறக்கியதற் கான கொடுப்பனவை, வவுனியா அரச அதிபர் இன்னமும் தமக்கு வழங்கவில்லை என வன்னி மாவட்ட தனியார் சிற்றூர்தி சங்கம் தெரிவித் துள்ளது.

இதுதொடர்பாக, இந்த சங்கம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் - கனகரத்தி னத்திற்கு கடிதமொன்றை அனுப்பி வைததுள்ளது.

அந்தக் கடிதத்தில் பொதுமக் களை ஏற்றியமைக்காக வழங்க வேண்டிய கொடுப்பனவை உடனடி யாகப் பெற்றுத்தருமாறும், தேர்தல் காலத்தில் கடமையாற்றிய சாரதி மற்றும் நடத்துநர்களுக்கும் இதுவரை கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். (03)

## அம்மன் ஆலய பொங்கல் விழா

இயக்கச்சி - முகாவில் திரியாய் அம்மன் ஆலய வருடாந்த பொங் கல் விழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

பொங்கல் விழா சம்மந்தமான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக் கிழமை ஆலய முன்றலில் நடை பெற்றது. (122)

## பாடசாலை மாணவர்களுக்கு பால்வழங்க நடவடிக்கை

பாடசாலைகளில் பால் வழங்கும் திட்டத்தினை அரசாங்கம் மீள அறி முகப்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

பாடசாலை மாணவர்களுள் 43 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் போசாக் கின்மை காரணமாக பாதிக்கப்பட்டுள் ளதாக ஆய்வுகள் மூலம் தெரியவரு கின்றது.

இதனைக் கருத்தில் கொண்டே, பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், 600 பாடசாலைகளில் மதிய உணவுத்திட்டத்தினையும் முதற்கட்டமாக நடைமுறைப்படுத்தப் போவதாக அரசாங்கம் அறிவித்துள் ளது. (122)

# சின்னஞ்சிறு செய்திகள்

## கிளிநொச்சி மாவட்டத்திற்கு அடுத்தமாதம் முதல் மின்சாரம்

(ஆழியவளை)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு எதிர்வரும் முதலாம் திகதி முதல் மின்சாரம் வழங்கப்படும் என - கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

முதற் கட்டமாக கிளிநொச்சி கந்தசாமி கோவில் பகுதியில் இருந்து டிப்போச் சந்திவரையிலான பகுதிகளுக்கு மின் வழங்கப்பட வுள்ளது. அடுத்த கட்டமாக ஏனைய பகுதிகளுக்கும், கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்படவுள்ளது. மின் இணைப்பு வேலைகள் துரிதகதியில் நடைபெற்றுவருகின்றன.

மின்சாரத்தைப் பெறுவதற்கு மின்வழங்கல் சேவைநிலையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்யும் நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபட்டுள்ளனர். (122)

## வெடிபொருட்களை முற்றாக அகற்ற இன்னும் 3 வருடங்கள் தேவை

குடாநாட்டில் வெடிபொருட்களை அகற்ற இன்னும் மூன்று வருட காலம் தேவையெனவும், யாழ். செயலகத்தில் இயங்கிவரும் மிதி வெடிகள் அகற்றும் இணைப்புச் செய லகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஐந்து வருடங்களில் குடா நாட்டில் மட்டும் 4 லட்சத்து 48 ஆயி ரத்தி 674 மிதிவெடிகள் அகற்றப்பட் டுள்ளன.

அந்த வகையில் தீவகத்தில் 199, யாழ்ப்பாணத்தில் 8174, நல்லூ ரில் 7931, தென்மராட்சியில் 30 ஆயி ரத்து 248, வடமராட்சியில் 10 ஆயி ரத்து 259, வடமராட்சி கிழக்கில் 3 இலட்சத்து 50 ஆயிரத்தி 768, வலி காமம் தெற்கில் 365, வலிகாமம் தென்மேற்கில் 466, வெடிபொருட் களும் மீட்கப்பட்டுள்ளதாக மிதி வெடிகள் அகற்றும் இணைப்புச் செயலகம் தெரிவித்துள்ளது. (122)

## சூழல்தினம்

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு யாழ்.மாநகரசபையினால் ஜூலை மாதம் 4 ஆம் திகதி நல் லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் சூழல்தினம் அனுஷடிக்கப்படவுள் ளது.

அன்றையதினம் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பாடசாலை களுக்கிடையே சூழல்தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட கீதம் இசைத்தல் மற்றும் பாவோதல் போட் டிகளில் வெற்றி பெற்ற மாணவர் களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

## எஸ்.எம்.கோபாலரத்தினத்தின் 3 நூல்களின் அறிமுகவிழா

(வடமராட்சி)

முதுபெரும் பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினத்தின் (எஸ்.எம்.ஜி.) மூன்று நூல்களின் அறிமுகவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

'ஈழமண்ணில் ஓர் இந்தியச்சிறை' 'அந்த உயிர்தானா உயிர்', 'பத்திரி கைத்துறையில் அரை நூற்றாண்டு' ஆகிய நூல்கள் அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளன. (17)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

1

ஆறாவது அகவையில்



பெயர் :ஜோ.வேதிகா

முகவரி : அல்வாய், வடமேற்கு அல்வாய்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்




# முயற்சி இருந்தால் சமுகத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெறலாம்


விஜயமாறன்

முன்னைய காலத்தில் ஒரு வீட்டுக்கு ஒரு சைக்கிள் நிற்பதே அருமையாக இருந்தது. ஆனால், தற்போதைய காலத்தில் வீட்டுக்கொரு மோட்டார் சைக்கிள் நிற்பது வழக்கமாகி விட்டது. அந்தவகையில் நாம் நெல்லியடியில் மோட்டார் சைக்கிள் திருத்தும் ஸ்தாபனத்தை வைத்திருக்கும் வி.விஜயமாறனுடன் பேசியபோது அவர் பகிர்ந்துகொண்ட கருத்துக்கள்...

நான் பிறந்து, வளர்ந்த இடம் திருகோணமலை, தற்போது மகாத்மாவீதி, நெல்லியடியில் வசித்து வருகின்றேன். எனது வயது 35. ஆனால், மோட்டார் சைக்கிள் திருத்துவதில் 17 வருட அனுபவமுள்ளது.

இந்தத் தொழிலில் எனக்கு படிக்கும் போதே ஆர்வம் இருந்தது. நான் 10 ஆம் ஆண்டு படிக்கும்போது, எமது வீட்டில் கஷ்டம் காரணமாகப் எனது படிப்பைத் தொடர முடியவில்லை. ஆகையால், சிறிது வருமானமாக இருந்தாலும் எனக்குப் பிடித்த தொழிலாகையால் இந்தத் தொழிலுக்கு சென்று வேலை செயய ஆரம்பித்தேன்.

1987 ஆம் ஆண்டு எனக்கு வயது 18 இருக்கும்போது திருகோணமலையில் சிறந்த மோட்டார் சைக்கிள் திருத்துனராக நேசராஜா இருந்தார். அவரிடம் சென்று மோட்டார் சைக்கிள் திருத்தும் பயிற்சியைப் பெற்றேன். 3 வருடங்கள் பயிற்சியில் கழிந்தது. பின்னர் 1989 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் வடமராட்சிக்கு இடம் பெயர்ந்து வந்தோம்.

1990 ஆம் ஆண்டில் தம்பசிட்டியில் மோட்டார் சைக்கிள் திருத்தும் கடையை கருணா வைத்திருந்தார். அவருடன் இணைந்து ஒரு வருடகாலம் வேலை செய்து வந்தேன்.

பின்னர் 1991 ஆம் ஆண்டு முதன் முறையாக நெல்லியடியில் வாடகைக்கு ஒரு கடையை எடுத்து நடத்திவந்தேன். 12 வருடங்களின் பின்னர் நிலவாடகையில் எனது சொந்தக் கட்டடம் ஒன்றை அமைத்து, தற்போது எனது தொழிலை நடத்திவருகின்றேன்.

எமது இந்தத் தொழிலுக்கு எதுவித சங்கமும் இல்லாதிருப்பது என்னைப் போல் முதலீடுகளை இட்டு தொழில் புரிபவர்களுக்குக் கஷ்டங்களை ஏற்படுத்துகின்றது. ஏனெனில், சிலர் வீடுகளில் சென்று வேலை செய்கிறார்கள்.

இதனால், அவர்கள் குறைந்த ஊதியத்தில் மோட்டார் சைக்கிளை திருத்திக் கொடுக்கின்றனர். இதற்கெல்லாம் ஒரு சங்கம் உருவாக்கினால் எமது வருமானமும் அதிகரிக்கும்.

1995 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் பெற்றோல் விலை ஏற்றத்தின் காரணத்தால், அனைவரும் மண்ணெண்ணையைப் பாவித்தார்கள். இதனால் தேய்மானங்கள், பழுதுகள் போன்றவை கூடுதலாகவும் காணப்பட்டது. ஆனால், தற்போதைய நிலையில் இவை மிகக் குறைவாகக் காணப்படுவதால் வருமானத்திலும் சற்று வீழ்ச்சி காணப்படுகின்றது. இதைவிட தற்போது மோட்டார் சைக்கிள் திருத்தும் கடைகளும் அதிகரித்து வருகின்றது.

என்னிடம் 6 பேர் பழகி வெளியே சென்றுள்ளனர். நாம் பயிற்சி பெறும் பொழுது வருமானத்தைக் கருத்தில் கொள்ளாது பயிற்சியை முடிக்கவேண்டும் என்ற ஆர்வத்துடன் பழகினோம்.

ஆனால், தற்போதைய இளைஞர்கள் வருமானத்தை நோக்கமாகக் கொண்டிருப்பது எனக்கு கவலையைத் தருகின்றது.

எனது அடுத்த நோக்கம் - போர்ச்சூழல் இல்லாது சமாதானம் உருவாகி வருமானால் சில நிறுவனங்கள், வங்கி போன்றவற்றின் கடனுதவியுடன் மோட்டார் உதிரிப்பாகங்கள் விற்கும் கடையொன்றையும் உருவாக்கவுள்ளேன்.

இவற்றைவிட பஜாஜ், ரி.வி.எஸ் நிறுவனங்களின் ஏக விநியோகஸ்தர்கள் பருத்தித்துறையில் 3 கடைகளுக்கு இலவச சேவிஸ் நடாத்தும் உரிமையைக் கொடுத்துள்ளார்கள். ஆனால், நெல்லியடியில் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. அதற்குக் காரணம் எமது ஸ்தாபனங்களின் வசதியின்மை ஆகும்.

ஆனால், எதிர்வரும் காலத் தில் இந்த அனுமதிகளைப் பெற்று மேலும், எனது ஸ்தாபனத்தைவிருத்தி செய்வதே எனது முழு நோக்கமாகும்.

நான் திருமணம் முடித்ததும் நெல்லியடியில்தான் இருக்கிறேன். எனக்கு 4 பிள்ளைகள் உள்ளனர். இதில் எனது மூத்த மகனை நன்றாகப் படிக்க வைத்து கடந்த புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடையச் செய்துள்ளேன்.

எனது பிள்ளைகளைச் சிறந்த முறையில் வளர்ப்பதிலும் பங்கு கொள்கிறேன். எனது மனைவி என்னுடைய முயற்சிகளில் பெரிதும் துணையாகவுள்ளார்.

முயற்சியிருந்தால்தான் தொழிலை மாத்திரமல்லாமல், வீட்டையும் மேம்படுத்தி சமூகத்தில் ஓர் அந்தஸ்தினையும் உருவாக்கிக் கொள்ளமுடியும் எனக் குறிப்பிட்டு தனது கருத்துக்களை முடித்துக்கொண்டார்.

விஜயமாறனிடம் இன்னொரு பக்கமும் உள்ளது. தனது வருமானத்துக்காக மோட்டார் சைக்கிள் திருத்தும் தொழிலைச்செய்து கொண்டபோதும், கலையில் மிகுந்த ஈடுபாடு உடையவராகவும் இவர் காணப்படுகின்றார். ஒரு ஓவியக் கலைஞனையும் இவரில் சந்திக்க முடிகின்றது. இவர் வரைந்த ஓவியங்கள் இவரது வீட்டில் அழகாக மாட்டப்பட்டிருப்பதையும் குறிப்பிட்டார். கலைத்துவமாக உரையாடக்கூடிய ஆற்றலையும் இவரிலே காணக் கூடியதாகவுள்ளது.

நேர்காணல் :- **க.கனெக்ஸ**

# நேரத்தை சிறப்பாகப் பயன்படுத்த தனிப்பட்ட நேர ஆய்வு உதவும்

தொழிற்சாலையொன்றில் ஒரு தொழிலாளியாயினும்சரி, தொழில்நிறுவனத்தை முகாமை செய்பவராயினும்சரி, தமக்கு கிடைக்கக்கூடிய நேரத்தை எவ்வாறு சிறப்பாகப் பயன்படுத்தவேண்டும் என்பதை தீர்மானித்துக் கொள்ளல்வேண்டும்.

கிடைக்கக்கூடிய நேரத்தை சரியாகவும், திறமையாகவும் செய்வதற்கு திட்டமிடுகின்றபோது - ஒருவர் தனக்குக் கிடைக்கும் நேரத்தைத் தற்போது எவ்வாறு பயன்படுத்துகின்றார் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். இதற்குத் தனிப்பட்ட நேர ஆய்வு மிகவும் பயனுடையதாக அமையும்.



இந்தத் தனிப்பட்ட நேர ஆய்வின் மூலமாகக் குறித்த ஒரு வேலையில் காணப்படும் பல்வேறு பிரிவுகளையும் எவ்வாறு திட்டமிடுவது என்பது புலனாகும்.

தொழில் புரிஞர் ஒருவருக்குப் பல தொழில்கள் செய்யவேண்டிய பொறுப்புக்கள் காணப்படும். இந்தப் பல்வேறுபட்ட தொழில்களுக்கு மத்தியில் ஒருவர் எந்தத் தொழிலை முதலில் செய்வது என்பது பிரச்சினைக்குரிய விடயமாக அமைந்துவிடுவது இயல்பானதாகும்.

இந்த நிலையில் எதை முதலில் செய்வது என்பது தீர்மானிக்கப்பட வேண்டிய தொன்றாகும். முன்னுரிமை அடிப்படையில் ஒரு தொழிலைச் செய்கின்றபோது, தொழிலின் அந்தப் பகுதியைச் செய்வதற்குரிய நேரம் எவ்வளவாகும் எனபதைத் தீர்மானித்துக் கொள்ளல் அவசியமாகும்.

இவ்வாறு தீர்மானிப்பது தொழிலைச் சிறப்பாகச் செய்வதற்குதவும்.

இவ்வாறான ஒரு நிலையில் தொழிலாளி ஒருவன் - தினக்குறிப்பை எழுதுவது பயனுள்ள ஒரு நடவடிக்கையாக அமையும்.

தினக்குறிப்பை எழுதுவதனூடாக, ஒரு தொழிலைப் பயனுள்ள வகையில் செலவு செய்வதற்குரிய நேரம் எவ்வாறு கழிந்தது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

தொழிலாளி ஒருவர் தினக்குறிப்பை எழுதும் வழக்கத்தையுடையவராக இருந்தால், அவர் பின்வரும் நடைமுறைகளில் தினக்குறிப்பை எழுதலாம்.

ஒரு கிழமைக்கு அல்லது இரண்டு கிழமைக்குச் செய்யவேண்டியது இதுவெனத் தனது தினக் குறிப்பில் அவர் முதலில் எழுதிவைத்துக் கொள்ளவேண்டும்.

ஒரு தினத்தைப் பதினைந்து நிமிடக் கூறுகளாகப் பிரித்து, ஒவ்வொரு காலத்திலும் என்ன செய்யவேண்டும் என்பதைக் குறித்து, அதன்படி செய்துவரும் தொழில்கள் சிறப்பானதாக அமையும்.

ஒரு தினக்குறிப்பை எழுதும்போது, ஒரு வேலையை இந்த நேரத்தில் செய்துமுடிக்கவேண்டும் என்று எழுதப்படும் குறிப்பு, சிலவேளைகளில் குறித்தநேரத்தில் செய்யப்படமுடியாமல் இருக்கக்கூடும் என்பதையும், இந்த இடத்தில் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அவ்வாறானதாகத் திட்டமிட்டபடி தொழில் ஒன்றைச் செய்துவந்தால், அது தொழில் புரிஞரின் சிறப்பான திட்டமிடலையும், தொழிற்பாட்டையும் வெளிப்படுத்தி நிற்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் கொள்ளத்தேவையில்லை.

ஒரு தினக்குறிப்பை எழுதி, அந்தத் தினக் குறிப்பின்மூலம், செயலாற்றுகின்ற ஒரு தொழில் புரிஞர் தினக்குறிப்பின்படி சரியாகச் செயற்படுகின்றோமா? என்பதைச் சுயசோதனை செய்து பார்த்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும்.

குறித்த நேரம் பயனுள்ள்தாக செலவழிக்கப்பட்டிருக்கின்றதா, அந்த நேரப் பயன்பாடு சந்தேகத்துக்கு இடமாகவுள்ளதா அல்லது பயனற்றதாக அமைந்துள்ளதா என்ற வினாவுக்குரிய விடையைப் புள்ளிகள் அடிப்படையில் பதிவுசெய்து கொள்ளலாம்.

வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் மிகச் சரியான முடிவுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறான ஒரு செயற்பாட்டின் மூலமாக, நேரத்தைப் பயன்படுத்துவதில் காணப்படும் பலவீனங்களை அறிந்துகொள்ளமுடியும்.

இவற்றின் மூலமாக நிறுவனத்தின் நேரப் பயன்பாடு அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும்.

- பூ.நகுலன் -

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 40/= | 60/= | 60/= | 60/= | 75/= | 50/= | 60/= | 60/= |
| வெண்டிக்காய் | 25/= | 40/= | 40/= | 30/= | 60/= | 30/= | 50/= | 40/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 80/= | 65/= | 80/= | 80/= | 60/= | 65/ | 6 0 /= |
| கத்தரிக்காய் | 40/= | 60/= | 60/= | 50/= | 60/= | 35/= | 50/= | 40/= |
| பாகற்காய் | 60/= | 60/= | 80/= | 70/= | 80/= | 60/= | 60/= | 60/= |
| கரட் | 50/= | 80/= | 80/= | 70/= | 80/= | 40/= | 60/= | 80/ |
| பீற்றூட் | 15/= | - | 40/= | 15/= | 40/= | 25/= | 40/= | 30/= |
| முருங்கக்காய் | 80/= | 100/= | 70/= | 90/= | 60/= | 70/= | 60/= | 60/= |
| வெங்காயம் | 45/= | 40/= | 50/= | 50/= | 60/= | 40/= | 40/= | 40/= |
| பச்சை மிளகாய் | 40/= | 50/= | 80/= | 40/= | 50/= | 30/= | 50/= | 60/= |

# தொழிலாளர் வினைத்திறனுடன் செயலாற்றுவது மேலதிகமான உற்பத்திக்கு வழிவகுக்கும்

உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் நீண்டகாலமாகவே பல்வேறு பொருளாதார முகாமைத்துவ உற்பத்திக் கருத்துக்களுடன் தொடர்புறுத்திப் பேசப்பட்டு வந்துள்ளன. உலகின் முதலாவது விஞ்ஞான முறையில் பொருளியல் கருத்துக்களை தெரிவித்த பிசியோ கிரட் (**Physio crat**) என்ற பிரான்சியர் இக்கருத்துக்களை 1700 ஆம் ஆண்டுகளிலேயே தனது சிந்தனைகளை வெளியிட்டுள்ளார்.

ஆயினும் 1856 - 1915 இல் வாழ்ந்த பிரக்டிக் டெயிலர் என்பவரே இந்த உற்பத்தித்திறன் கருத்துக்களை விஞ்ஞான முறையில் தெளிவாக்கினார். உற்பத்தியாளர்களும் தொழிலாளர்களும் வினைத்திறனுடன் செயலாற்றுவதினூடாக மேலதிக உற்பத்தியைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை இவர் விளக்கியதோடு இவ்வாறு மேலதிகமாகக் கிடைக்கும் அபரிமிதத்தை - உற்பத்தியாளரும், தொழிலாளருமே பகிர்ந்து கொள்ளவேண்டும் என்ற கருத்துக்களையும் அன்றே இவர் முன்வைத்தார்.

இன்றைய நவீன உற்பத்தித்திறன் கொள்கைகள் முன்னைய கொள்கைகளில் இருந்தும் சிறிது வேறுபட்டுள்ளன. இன்றைய நவீன கருத்துக்கள் 2 ஆம் உலக மகாயுத்தத்தின் பின்பே அதிகமாக முன்வைக்கப்பட்டன. ஜப்பானும், மேற்கு நாடுகளும் யுத்தத்தினால் இழந்த தமது நாட்டின் செல்வத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு முனைப்புடன் செயற்படவேண்டியிருந்தது. புதிய முகாமைத்துவ உத்திகளைப் பயன்படுத்துவதன் மூலமும், உற்பத்தியில் பல்வேறு முன்னேற்றங்களை எய்துவதினூடாகவும் உற்பத்தித்திறனை அதிகரிக்க முடியுமென இந்த நாடுகள் உணர்ந்தன. மேற்கு நாடுகள் தமது மரபு ரீதியிலான முகாமைக் கருத்துக்களுடன் நவீன முகாமைக் கருத்துக்களையும் உள்ளடக்கி உற்பத்தித்திறனை அதிகரிக்க முன்வந்தன. இவ்வாறே, ஜப்பானும் மரபு ரீதியிலான முகாமைத்துவக் கருத்துக்களுக்கு மெருகூட்டுவதில் தனித்துவமாகச் செயற்பட்டது. எவ்வாறாயினும் ஜப்பானிய உற்பத்தித்திறன் கருத்துக்களில் இன்று கூடுதல் நாட்டத்தை செலுத்தி வருகின்றன.

இன்று பல்வேறு நாடுகளும் உற்பத்தித்திறனுக்கு மதிப்பளிக்கின்றன. பல்வேறு தொழிலாளர்களை அவதானித்தால் அவர்களுடைய கல்வித்தரம், தொழில்திறன் என்பன ஒரு தரமாக இருப்பினும், அவர்களுடைய உற்பத்தித்திறன் மனோபாவம் என்பவற்றிற்கிடையில் பல முரண்பாடுகள் இருப்பதனையும் மனிதர்களை முகாமைசெய்தல் என்பது மிகவும் கடினமாக பணியாகும். உற்பத்தி வளங்களுள் மனித வளமொன்றே நிர்வகிப்பதற்கு கடினமானதென பல்வேறு முகாமைத் தரத்தினரும் ஒப்புக்கொள்கின்றனர். மனித விருப்பங்கள், எண்ணங்களை அறிந்துகொள்வது கடினமாகும். மனிதரது உற்பத்தித்திறனை மேம்படுத்த பணியாளர்களது மனோநிலையை அறிந்து ஊக்குவித்தல் மூலமே, உற்பத்தித்திறனை மேம்படுத்த முடியுமென இன்றுள்ள பல்வேறு முகாமையாளர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். இன்று உற்பத்தித்திறன் பற்றிப் பேசும்போது - தரம், தொழில்நுட்பம், நிறுவன அமைப்பு, நிறுவனக் கலாசாரம் மாறிவரும் பொருளாதார சூழ்நிலை, முகாமைக் கண்ணோட்டங்களில் மாற்றம் என்பன பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

இன்று உற்பத்தித்திறன் என்னும் விடயம் பற்றி தேசிய அடிப்படையிலும், பல்வேறு நாடுகளின் பொருளாதார அணுகு முறைகளிலும் முக்கியத்துவம் செலுத்தப்படுகிறது. பல நாடுகள் உற்பத்தித்திறனுக்கு முக்கியத்துவம் கொடுத்ததன் காரணத்தால் இன்று அவை பல்வேறு வகையிலும் வளர்ச்சியினைப் பெற்றுள்ளன.

குறிப்பாக, சிங்கப்பூரை அவதானித்தால் - அந்நாட்டின் மூலவளம் மனிதவளம் ஒன்றேயாகும். அந்த மனித வளத்தை மட்டும் வைத்துக்கொண்டே பல்வேறு வகையிலும் அந்த நாடு சிறந்த வளர்ச்சியை அடைந்துள்ளது.

இன்றைய உலகில் உற்பத்தித்திறன் என்பது பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கவும், நாணய மதிப்பினை ஸ்திர நிலையில் வைத்திருப்பதற்கும், சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் பேணுவதற்கும் அவசியமான ஒரு கருப்பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது.

உற்பத்தித்திறன் என்ற சொல் முன்னர் பொருளாதார வியலாளர்கள் பயன்படுத்திய சொல்லாக இருந்தது. ஆனால், இன்று சகலருக்கும் தேவையான ஒன்றாக மாறிவிட்டது. கொள்கையை வகுப்போர், வியாபாரிகள், தொழிலாளர்கள், உத்தியோகத்தர்கள், இல்லத்தரசிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் என எல்லோரும் இதன் முக்கியத்துவம் அவசியம் எனக் கருதப்படுகிறது. இன்று பல நாடுகளில் - தெருவில் போகும் சாதாரண மனிதரும் இந்தச் சொல்லின் முக்கியத்துவத்தை அறிந்துள்ளனர்.

ஜப்பானியர்களின் கருத்துப்படி உற்பத்தித்திறன் மனித மனோநிலையுடன் தொடர்புடைய ஒன்றாகும்.

இதுவொரு உளரீதியான எண்ணப்பாங்குடன் அமைந்தது.

நடைமுறை ஒழுங்குடன் சம்பந்தமுடையது.

தெளிவாகக் காணக்கூடியதாக இருப்பது.

தர மேம்பாட்டுடன் சம்பந்தமுடையது.

மக்களின் வேலைக்கு மேலதிகப் பெறுமதி சேர்ப்பது.

குழு ஒற்றுமையை உருவாக்குவது.

வினைத்திறனுடன் சம்பந்தமுடையது.

வேலையினால் பெருமை கொள்ளக்கூடியது.

நுகர்வோனின் விருப்பத்தை நோக்கி அமைந்தது.

இயந்திரங்களையும், ஒழுங்கு முறைகளையும் அடிப்படையாகக் கொண்டது.

வேலையில் தேர்ச்சியடைவதனை வழமையாகக் கொண்டது.

அறிவு, வேலைத்திறன், மனோபாவம், குழுமுறைமை என்பவற்றுடன் தொடர்புடையது.

சிறந்த முகாமையும், வேலை ஒழுங்கு முறையையும் பேணி நிற்பது.

உற்பத்திச் செலவைக் குறைப்பதுடனும் நேரக் கட்டுப்பாட்டுடனும் தொடர்புடையது.

எல்லாவற்றையும்விட சிறந்த வாழ்க்கைத்தரத்தைப் பேணுவதாக அமைந்தது.

# அதிக விளைச்சலைப் பெற்றுத்தரும் வத்தாளை உற்பத்தி



இலங்கையில் ஈரமான உலர்வலய பிரதேசங்களில் சுலபமாக உற்பத்தியை மேற்கொள்ளக்கூடிய கிழங்காக வத்தாளை காணப்படுகிறது. அதிக விளைச்சலைப் பெற்றுத் தரக்கூடிய உற்பத்தியாகவும் இது விளங்குகிறது. அத்துடன், விவசாயிகளுக்கு இலாபத்தைப் பெற்றுத்தரும் உற்பத்தியாகவும் காணப்படுகிறது. நீர் விநியோகம் ஆண்டு முழுவதும் சீராகக் கிடைக்குமாயின் எந்தக் காலத்திலும் வத்தாளை உற்பத்தியை மேற்கொள்ளலாம்.

மேலும், உருளைக்கிழங்கு பயிரிடப்படும் முறை மாதிரியே வத்தாளையும் பயிரிடப்படுகிறது. இந்தக் கிழங்கில் காபோகைதரேட் 25 வீதமும், புரோட்டின் 24 வீதமும் காணப்படுகின்றன. சில கிழங்குகளோடு ஒப்பிடும்போது வத்தாளையில் விட்டமின் அதிகளவு இருப்பதைக் காணலாம்.

வத்தாளையைக் கொண்டு பல்வேறுபட்ட உணவு வகைகளைத் தயாரிக்கலாம்.

வத்தாளைக் கொழுந்தினையும் உபயோகித்து உணவு தயாரித்துக் கொள்ளலாம். இந்த உற்பத்தியில் அதிக இலாபம் கிடைப்பதோடு, இதற்கு மேலதிக விவசாய நிர்வாகத் திட்டங்களும் தேவைப்படுவதில்லை. மேலும் இதற்கு இரசாயன உரங்கள் குறைவாகவே உபயோகப்படுத்தப்படுகிறது. அதே போல் சிறிது காலத்தில் விளைச்சலையும் பெற்றுக்கொடுக்கும். அதிகளவு வத்தாளை உற்பத்தி - தம்புள்ள, ஏராவுல, வேவல ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. வத்தாளை இருவகைப்படும். ஒன்று சிவப்பு வத்தாளை, மற்றையது வெள்ளை வத்தாளை.

### காலநிலை

வத்தாளைச் செடிக்கு உஷ்ணமும், அவை வளர்ச்சிடையும் காலத்தில் நீரும் தேவைப்படுகிறது. கிழங்கு முளைக்கும் காலத்தில் வரண்ட வெப்பநிலை இருப்பது மிகவும் நல்லது.

### உற்பத்தி செய்யும் காலம்

உலர்வலய பிரதேசங்களில் பெரும் போகத்தில் மாத்திரம் உற்பத்தி செய்யப்படுகிறது. புரட்டாதி மாத முன் இரு வாரத்திற்குள் வத்தாளைத் தண்டுகளை முளைக்கவைக்க வேண்டும். ஈரவலயத்திலும் - பெரும்போகத்திற்கு புராட்டாதி மாத முதல் வாரத்திலும், சிறு போகத்திற்கு - சித்திரை மாதத்தில் முளைக்க வைக்கலாம். தேவையானபோது மேலதிக நீர் விநியோகம் கொடுப்பதன் மூலம் வருடத்தில் எந்தக் காலத்திலும் உற்பத்தியை மேற்கொள்ளலாம்.

### மண்

நன்றாக நீர் இழுக்கும் தன்மையுள்ள நீருள்ள மணல் சேர்ந்த மண், உற்பத்திக்கு மிக உகந்ததாகும். இறுக்கமான களிமண்ணில் நன்றாக வத்தாளைச்செடி வளரும். ஆனால், விளைச்சல் குறைவாக இருக்கும். இந்தப் பிரதேசத்தில் கிழங்கின் அமைப்பும் வித்தியாசமாகக் காணப்படும்.

### வத்தாளை நடுகை முறை

☆ வத்தாளைச் செடிகளில் இருந்து வெட்டிக்கொண்ட தண்டுகளை நடுவதால் அதிக இலாபத்தைப் பெறலாம்.

☆ மணலில் இருக்கும் தண்டுகளை நடுவதினால் மண்ணினால் பரவும் நோய்களைத் தடுத்துக் கொள்ளலாம்.

☆ 10" - 12" அளவு நீளமான தண்டுகளை முளைக்க வைக்க வேண்டும். ஒரு ஏக்கர் உற்பத்திக்காக 28,000 - 30,000 தண்டுகள் தேவைப்படுகிறது.

### மண்ணை ஒழுங்கு செய்தலும், பயிரிடுதலும்

10"- 12" ஆழத்திற்கு நிலத்தைக் கொத்தி மண்ணைப் புரட்டி விவசாய நிலத்தை தயாரித்துக்கொள்ளவேண்டும்.

இரண்டு அடி இடைவெளியில் 12-15 அங்குலம்வரை தண்டின் உயரம் இருப்பது மிக முக்கியமாகும். நிலத்தில் 6-8 அங்குலம் வரை இடைவெளிவிட்டு தண்டின் உயரத்தில் கொஞ்சம் நிலத்தில் மண்ணில் உள்ளே இருக்குமாறு பயிரிட வேண்டும்.

### களைகளைத் தடுக்கும் முறை

பயிரிட்ட முதல் இரு மாதத்துக்குள் புற்களை நீக்க வேண்டும். இதற்காக தண்டுகளை முளைக்க வைத்து ஒரு மாத காலத்துக்குள் தண்டுகளுக்கு படாதபடி பரகொட் (**Paracat**) போட்டுப் புற்களை நீக்கலாம்.

**உரம் போடுதல்**

| உரம் வகைகள் | பயிரிட்டு 15 நாட்களில் ஏக்கருக்கு கி.கி. | பயிரிட்டு 06 வாரம் |
|---|---|---|
| யூரியா | 24 | 24 |
| பொஸ்பேட் | 48 | - |
| மியுரேட் ஓசப்பொட்டாஸ் | 48 | 24 |

உரம் பாவிக்கும்போது செடியின் வேர் இருக்கும் இடத்தில் இருந்து 4" - 5" தூரத்தில் உரத்தினைப் போடுவதால் இலைகள் மற்றும் தண்டுகள் எரிவதை தடுத்துக் கொள்ளலாம்.

### நோய்த்தாக்கம்

☆ வத்தாளையைத் தாக்கும் முக்கிய நோய்களில் ஒன்று வத்தாளை வண்டின் மூலம் ஏற்படுகிறது.

வத்தாளைத் தணடுகளில் வண்டின் பாதிப்பு ஏற்படும் போது தண்டுகள் வெடித்து இலைகளின் வளர்ச்சி குறையும். அதனால் செடியின் பலம் குறைந்து விளைச்சல் குறைவடையும்

☆ கிழங்குகளுக்கு பாதிப்பு ஏற்படும்போது அந்த ஓட்டைகளில் நுண்ணங்கி, பற்றீரியா உள்ளிடுவதால் கிழக்கு அழுகிப் போகும். இதனால் வியாபார நிலையங்களுக்கு அனுப்பும் கிழங்கின் அளவு குறையும்.

☆ களஞ்சிப்படுத்தி இருக்கும் வத்தாளைகளுக்கும் இந்த வண்டின் பாதிப்பு ஏற்படும்.

### நிர்வாகமுறை

☆ செழிப்பான உற்பத்தியைப் பெற்றுக்கொள்ள ஆரோக்கியமான தண்டுகளை நடுதல் வேண்டும்.

**மண் அணை -**

உற்பத்தியின் முதல் காலத்தில் இரண்டு வாரத்திற்கு ஒரு தடவைகளாக - பல தடவை மண் அணை கட்டுவதனால் பாதிப்பைக் குறைத்துக் கொள்ளலாம். கிழங்குகள் மண்ணுக்கு மேலாக தெரிவதை தடுத்துக்கொள்ளல் வேண்டும்.

**செடி வரிசை -**

☆ தகுந்த சந்தர்ப்பத்தில், தகுந்த காலத்தில் விளைச்சல்களை பெறுதல், மேல் குறிப்பிட்ட நிர்வாக திட்டங்களில் நிர்வாகம் பண்ண முடியாமல் போனால் புதுத்திட்டங்களை பாவிப்பது மிக உகந்தது.

*- சசி சந்திரகாசன் -*

# தொழில் வங்கி



| நிறுவனம் | வெற்றிடமாகவுள்ள பதவிகள் | அடிப்படைத் தகுதி | முடிவு திகதி |
|---|---|---|---|
| யுனைட்டெட் நேஷன்ஸ் ஐ.நா.அபிவிருத்தித்திட்டம் புரோக்கிராம் 12, 12 கொவர் ஸ்ரீட் கொழும்பு - 05 | 1. பொறியியலாளர் திருகோணமலை.<br>2. திட்ட உதவியாளர் திருகோணமலை<br>3. திட்ட அலுவலர் கொழும்பு | 1. சிவில் பொறியியலாளர் 5 வருட அனுபவம், ஆங்கில புலமை கணினி அறிவு<br>2. விவசாயம்/ அரசியல் சமூக விஞ்ஞானம்/ பொருளியல் துறையில் ஏதாவது ஒன்றில் பட்டப் படிப்பு<br>3 - 5 வருட அனுபவம், கணினி அறிவு<br>3. உரிய துறையில் பட்டப்படிப்பு<br>3 - 5 வருட அனுபவம்<br>கணினி அறிவு | 30.05.2004 |
| சிறுவர் பாதுகாப்பு நிதியம் 58 A ஹேடன் பிளேஸ் கொழும்பு - 07 | பங்கு அபிவிருத்தி முகாமையாளர் மட்டக்களப்பு யாழ்ப்பாணம். | முகாமைத்துவப் பட்டதாரி அல்லது அவை சார்ந்த பட்டப்படிப்பு 3 வருட அனுபவம், கணினி அறிவு | 05.06.2004 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறவிரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

## ஒரு மூத்த பத்திரிகையாளர் கௌரவிக்கப்படுகிறார்



அரை நூற்றாண்டுக்கு மேலாக ஈழத்தின் பத்திரிகை உலகில் மிளிர்ந்துகொண்டிருக்கும் எங்கள் அன்புக்குரிய கோபு ஐயா (எஸ்.எம்.கோபாலரத்தினம் - எஸ்.எம்.ஜி) இன்று தாயக மண்ணில் கௌரவம் பெறுகின்றார். தேசிய விடுதலைப் போராட்டத்தில் மிக நீண்ட காலம் பங்காற்றி வரும் போராளி வே.இளங்குமரன் இவருக்கு தங்கப் பதக்கம் சூட்டிக் கௌரவிக்கின்றார். வாழுமபோதே கௌரவிக்கும் இந்த நிகழ்வின்மூலம், தொடர்நதும் அவரது எழுத்துப் பணியை ஊக்குவிப்பதுடன் அதனால் பயன்பெறுகிறது ஈழத்தமிழினம். இந்த நிகழ்வில் கோபு ஐயாவின் "ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை", "அந்த ஒரு உயிர்தானா உயர்?", "பத்திரிகைப் பணியில் அரை நூற்றாண்டு" ஆகிய நூல்கள் அறிமுகம் செய்துவைக்கப்படவுள்ளன. கிளிநொச்சி மாவட்ட கலாசார பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரபல அரசியல் விமர்சகரும், பத்தி எழுத்தாளருமான மு.திருநாவுக்கரசு - இவரது எழுத்துப் பணிகுறித்து விரிவாக எடுத்துரைக்கவுள்ளார். இதன்மூலம் ஈழத்தின் தமிழ் பத்திரிகை உலகின் வரலாறு பற்றி தெரிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

வீரகேசரி நாளிதழில் படி திருத்துநராக இணைந்து கொண்ட இவர், படிப்படியாக உயாந்து தன்னை ஈழப்பத்திரிகை உலகத்தில் தனித்துவமானவராக இனம் காட்டிக்கொண்டார். "ஈழநாடு, காலைக் கதிர், ஈழமுரசு, செய்திக் கதிர், ஈழநாதம், தினக்கதிர் என்பனவற்றின் பிரதம ஆசிரியராக ஒவ்வொரு காலகட்டத்திலும் மிளிர்ந்துள்ளார்.

எழுத்துப் போராளியாகவே தன்னை இனங்காட்டிக் கொண்டதால், சொந்த வாழ்வில் பல இடர்களைச் சந்தித்தவர் இவர். எப்போதும் தான் பணியாற்றிய நிறுவனத்துக்கு விசுவாசமாகவே வாழ்ந்து வந்தார். அதாவது தான் பணியாற்றிய நிறுவனத்துக்கு கிடைக்கும் செய்திகளை வேறொரு நிறுவனத்துக்கு இரகசியமாக விற்கும் ரகத்தினருள் இவரை அடக்கமுடியாது. இதனால் தான் இன்றும் இவர் அனைவராலும் மதிக்கப்படுகின்றார்.

இவரது போர்க்குணம் வீரகேசரி நிறுவனத்துக்கு வெளியே நிற்கும் நிலையை உருவாக்கியது. இந்திய இராணுவம் தனது புஜபல பராக்கிரமத்தை காட்டப் புறப்பட்ட காலகட்டத்தில், இவா வசதி இருக்கும் பாதைகளை நாடாமல், கடமை இருக்கும் பாதையை நாடினார். அக்கால கட்டத்தில் இவர் பணியாற்றிய 'ஈழமுரசு' பத்திரிகை நிறுவனத்தையும், 'முரசொலி' பத்திரிகை நிறுவனத்தையும் குண்டுவைத்துத் தகர்த்தது இந்திய இராணுவம். ஆனாலும், பல வசதியீனங்களுக்கு மத்தியிலும், இராணுவக் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் தன்னால் முடிந்தவரை பத்திரிகையை வெளிவரச் செய்தவர் இவர். இதனால்தான் எந்தநாட்டுச் சட்டத்தின் கீழ் என்று புரியாத நிலையில் கைதாகி, கொடிய சிறைவாசத்தையும் அனுபவித்தவர் இவர். விடுதலையாகி வந்தாலும் 'ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை' என்ற தொடரில் தனனைக் கைது செய்த நாட்டினரின் பத்திரிகையில் (ஜுனியர் விகடன்) இந்தியப் படையினரைத் தோலுரித்துக் காட்டியவர் இவர், இந்தியப் படையினரைத் திருப்பி அழைத்துக் கொள்ளவேண்டும் என்ற கருத்து- இந்திய மக்களிடையே பலம் பெற இவரது எழுத்துக்களும் கணிசமான பங்கை ஆற்றியுள்ளது. இதுவே முன்னர் குறிப்பிட்டது போன்று 'வசதி இருககும் பாதையை நாடாது கடமை இருக்கும் பாதை நாடுவது' என்பது.

பிராந்தியப் பத்திரிகைகளின் தோற்றத்தில் இவரது பங்கு மகத்தானது. யாழ்பாணத்தில் மட்டுமல்ல மட்டக்களப்பிலும் இவர் தன்னை இனங காட்டிக் கொண்டார். விசேட பதிப்பை வெளியிட்டதன் மூலம் ஈழநாட்டை யாழ்ப்பாணத்தில் நிலை நிறுத்தினார் இவர். யாழ். கச்சேரி முன்பாக நடைபெற்ற சத்தியாக்கிரகம் - ஆயுத முனையில் முறியடிக்கப்பட்டபோது, அதில் பங்குபற்றியோர் யாழ். பேருந்து நிலையத்துக்கு சென்றபோது, கச்சேரியில் நிகழ்ந்த நிகழ்வுகளைத் தாங்கிய ஈழநாடு விசேட பதிப்பைக் கொடுத்து, யாழ். மக்களை ஆச்சரியப்படுத்தினார் இவர். அவ்வளவு வேகம் இவரது எழுத்திலும், செயலிலும் இருந்தது.

இதைப் போலவே ஈழமுரசு காலத்திலும் இராணுவ முகாம் தாக்குதல் நடைபெற்றால், இன்று ஈழமுரசு விசேட பதிப்பு வெளிவரும் என்று நம்பிக்கையை யாழ். மக்கள் மத்தியில் பதித்தவர் இவர். எம்.ஜி.ஆர், சிவாஜி படத்துக்கு நுழைவுச் சீட்டு பெறுவதற்காக திரை அரங்கு முன்னால் நெருங்கியடித்த மக்கள் கூட்டம் போன்று, பத்திரிகை பணிமனைக்கு முன்னால் மக்கள் நெருக்கியடித்து வீதிப்போக்குவரத்தே ஸ்தம்பித்துப்போன நிலையில் பத்திரிகையைப் பெற்றுச் சென்ற காலம் அது.

பரபரப்புக்கு மத்தியிலும், செய்தியின் உண்மைத்தன்மை குறித்தே இவர் மிகவும் கவனம் செலுத்துவார். சந்தேகமான செய்தியாயின் அதற்குரிய இடம் குப்பைக்கூடை தான் என்பது இவர் தனது வாரிசுகளுக்கு சொல்லும் பாலபாடம். இநத விடயத்தில் அவர் எப்போதும் விட்டுக் கொடுக்காத போக்கையே கடைப்பிடித்தார். ஒரு செய்தி எப்படி வெளிவரவேண்டுமென்பதைவிட எப்படி வெளிவரக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்டி அடுத்த தலை முறையினரை உருவாக்கினார்.

இவரது அனுபவங்கள் இளம் பத்திரிகையாளர்களுக்கு ஒரு பாடம். இவரைக் கௌரவிப்பதன் மூலம் தன்னைக் கௌரவித்துக் கொள்கிறது இந்த மண்.

- அப்பாவி

## செய்திக் கட்டுரை

ந.கஜமுகன்



# மக்களை ஆத்திரமூட்டும் ஊடகங்கள் மீது எச்சரிக்கையாக இருப்பது அவசியம்

தென்னிலங்கையிலிருந்து ஒலிபரப்பாகும் 'தென்றல்' அலைவாிசையூடாக தினமும் மாலை தாயக நேரப்படி 6.30 மணி தொடக்கம் 7.30 மணி வரை சுமார் ஒரு மணித்தியாலம் 'ஊரோடு உறவாடல்' எனும் பிரித்தானியா ஒலிபரப்பு இன்று தமிழ் மக்களிடையே பெரும் எதிர்ப்பை சம்பாதித்து வருகின் றது.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது, தமிழ்த்தேச விரோத சக்திகளின் ஆதரவுப் பின்னணியில் ஆரம்பமானது இந்த ஒலிபரப்பு.

தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதைத்துவிடும் நோக்கில் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம். உங்கள் வாக்குகளை சுயேட்சைக் குழுக்களுக்கும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கும் போட்டு - அவர்களை வெற்றியடையச் செய்யுங்கள் என தேர்தல் பிரசாரம் செய்தது.

ஆனாலும் தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை மிகவும் சரியான முறையில் திட்டமிட்டு அளித்தனர் அது இலங்கை தமிழரசுக் கட்சிக்கு 20 ஆசனங்களைப் பெற்றுக்கொடுத்தது, தேசியப்பட்டியல் மூலம மேலும் 2 ஆசனங்கள் கிடைக்க வழிசெய்ததுடன், மொத்தம் 22 ஆசனங்களைக் கைப்பற்றவும் வழிவகுக்கப்பட்டது.

மேலும் பல்லாயிரம் போராளிகளின் குருதியால் கட்டியெழுப்பப்பட்ட தமிழீழ விடுதலைப் போராட்டத்தினைக் கொச்சைப்படுத்தும் வகையில் இதன்மூலம் கருத்துக்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினையும், விடுதலைப் புலிகளையும் மிகவும் இழிவாக விமர்சித்து ஒலிபரப்பாவதால், இந்த ஒலிபரப்பு - தமிழ் மக்களிடையே பெரும் விசனத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. ஊரோடு உறவாடல் எனும் நாமம் கொண்டு ஊரையே சிதைக்கும் நோக்கில் இந்த வானொலி கருத்துக்களை ஒலிபரப்புகின்றது.

விடுதலைப் புலிகள் பற்றி தமிழ் மக்களிடையே தவறான கருத்துக்களை விதைப்பதன்மூலம் தமிழ் மக்களையும், புலிகளையும் பிரித்துவிட்டு 'ஏவிவிட்டு கூத்துப் பார்ப்பவன்' போல எட்டி நின்று கூத்துப் பார்க்கலாம் என பகற்கனவு கண்டு வருகின்றது இந்த ஒலிபரப்பு.

இந்த ஒலிபரப்பின் பின்னணியில் தமிழ் தேச விரோத சக்திகளுக்கு அரசும் தோள் கொடுப்பதுபோல் தெரிகின்றது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

**தமிழ் மக்களின் ஒற்றுமையை எவராலும் சிதைக்கமுடியாது. கடந்தகால வரலாறுகள் தமிழ் மக்களுக்கு பல அனுபவங்களைக் கற்றுக்கொடுத்துள்ளது. சமாதான வழியில் மட்டுமல்ல ஆயுதம் ஏந்திப் போராடக்கூட தயங்காது தயாராக நிற்பவர்கள் தமிழ் மக்கள்**

அண்மையில் கிழக்கில் ஏற்பட்ட நெருக்கடிகளின்போது, விடுதலைப் புலிகளின் பலம் - ஆட்டம் கண்டுவிட்டது, கருணா இல்லாவிடில் விடுதலைப் புலிகளால் போராடமுடியாது, வெற்றிபெற இயலாது என்றும் -

கருணாவைப் புலிகள் புறக்கணிக்கின்றனர். விடுதலைப் போராட்டத்தின் பலமே கருணாதான் எனவும் முழங்கியது இந்த ஒலிபரப்பு.

கருணாவைத் தாயகத்திலிருந்து வெளியேற்ற விடுதலைப் புலிகள் இரத்தம் சிந்தாது மேற்கொண்ட நடவடிக்கையை, ஜேர்மனியில் 15 நூற்றாண்டுகளுக்கு முன் கத்தோலிக்கர்களிடையே ஏற்பட்ட யுத்தத்தோடு ஒப்பிட்டு வர்ணித்தது.

கருணாவுக்காக நீலிக்கண்ணீர் வடித்த இந்த ஒலிபரப்பு - கருணா விடயத்தில் காட்டிய அதீத அக்கறை தமிழ் மக்களிடையே எதிர்ப்பையே எதிர்கொள்ள வைத்தது.

கருணாவை விட்டால் புலிகளுக்குத் தோல்வி என்று கணக்குப் போட்டுக் கொண்டிருந்த இந்த ஒலிபரப்பு - கருணாவை கிழக்கிலிருந்து துரத்தியடித்த போது, புலிகள் பற்றித் தப்புக்கணக்குப் போட்டதாக உணர்ந்துவிட்டதுபோல் தெரிகின்றது.

விடுதலைப் புலிகள் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களைச் சண்டையில் ஈடுபடுத்துகின்றனர் எனத் தெரிவித்தது. எப்படி? எந்த வகையில் புலிகள் பற்றித் தவறான கருத்துக்களைக் கூறமுடியுமோ அந்த அளவிற்கு வாலும், தலையும் வைதது ஒலிபரப்பும் திறமை இந்த ஒலிபரப்பிற்கு உள்ளது போல் தெரிகின்றது.

ஊடகங்கள் என்பவை பக்க சார்பின்றி நடுநிலையாக செயற்படவேண்டும். உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை வெளியிடும் ஊடகங்கள்மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

தமிழ் மக்கள் தங்களது ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் தான் என்பதை சர்வதேசத்துக்கு நன்கு உணர்த்தியுள்ளனர்.

எனவே, தமிழ் மக்களின் ஒற்றுமையை எவராலும் சிதைக்கமுடியாது. கடந்த கால வரலாறுகள் தமிழ் மக்களுக்கு பல அனுபவங்களைக் கற்றுக்கொடுத்துள்ளது.

சமாதான வழியில் மட்டுமல்ல ஆயுதம் ஏந்திப் போராடக்கூட தயங்காது தயாராக நிற்பவர்கள் தமிழ் மக்கள்.

கடந்த காலங்களில் போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தாகிய பின்பும், நெடுநதீவு கடற்பரப்பிலும், முல்லைக் கடற்பரப்பிலும் சிங்கள இராணுவம் - விடுதலைப் புலிகள் மீது போர்நிறுத்த உடன்படிககையை மீறி மேற்கொண்ட நடவடிக்கைகளில்கூட போராளிகளை இழந்தும் பொறுமை காத்தவர்கள் புலிகள். அத்தகைய பெருமைப்படக்கூடிய விதத்தில் செயற்படும் புலிகள் பற்றி அவதூறான கருத்துக்களைப் பரப்பிவரும் இந்த ஊடகம் - தமிழினத்திற்கு எதிரான ஒன்றேயாகும். இதனை மக்கள் தெளிவாக உணர்ந்தும் உள்ளனர்.

எனவே, தமிழ் மக்களிடையே ஆத்திரமூட்டும் வகையான கருத்துக்களைத் தெரிவிக்கும் இந்த ஊடகம்மீது மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

இந்த ஊடகம் ஒரு தமிழ் தேசவிரோத சக்தியாகவே தமிழ் மக்கள் கருதுகின்றனர். எனினும், தமிழ் மக்களையும், புலிகளையும் பிரிக்கமுடியாது என்பது இந்த ஊடகத்திற்குப் புரியாமல் இருப்பதுதான் கோமாளித்தனமானது.

அகதி வாழ்வின் அவலங்கள் - பகுதி 50 - சிவாசின்னப்பொடி

# புலம்பெயர்ந்த நாடுகளில் தொடர்ந்தும் தமிழ் அடையாளங்கள் பேணப்படுமா?

**(நேற்றைய தொடர்ச்சி...)**

இன்று மேற்குலகில் தமிழர்கள் இல்லாத நாடு என்று ஒன்றும் கிடையாது. ஆனால், அங்குள்ள தமிழர்கள் தமிழர்களாக இருக்கிறார்களா என்பதுதான் பிரச்சினை. இந்துக் கோயில்கள், திருவிழாக்கள், தேரோட்டங்கள் எல்லாம் இருந்தாலும்..... தமிழ் பாடசாலைகள், நாட்டிய பாடசாலைகள், தமிழ்ச் சங்கங்கள் எல்லாம் இருப்பதாக நாம் பெருமை பேசிக் கொண்டாலும்... பாரிசிலே ஒரு குட்டி யாழ்ப்பாணத்தை உருவாக்கி விட்டதாக பெருமிதம் கொண்டாலும்... இவையெல்லாம் தமிழை தமிழ் அடையாளத்தைக் காக்க உதவுமா என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாகவே உள்ளது.

தமிழர்கள் புலமபெயர்ந்த சூழலில் - தமது இருப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமானால், முதலில் அவர்கள் பொருளாதாரரீதியாக பலம்பெறவேண்டும்.

பொருளாதாரரீதியான பலம் என்று சொல்கிறபோது ஒரு தமிழன் இன்னொரு தமிழனைச் சுரண்டி அல்லது இன்னொரு தமிழனுக்குப் போட்டியாக வியாபாரம் செய்து முதலீட்டுவது அல்ல...

ஒட்டுமொத்தமான அல்லது கணிசமான புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒன்றிணைந்து, புலம்பெயர்ந்த நாட்டுப் பொருளாதாரத்தில் தமிழ்ச் சமூக பொருளாதாரத்தை இழுத்துக் கொள்வது இதற்கான முயற்சி இதுவரை செய்யப்படவேயில்லை.

தமிழர்கள் தமிழர்களை சுரண்டுகின்றார்களேயல்லாது, மாற்றினத்தவர்களுக்கு வியாபாரம் செய்ய இன்னும் பழகவில்லை. பங்குச் சந்தை பற்றிய அறிவும், அதில் முதலீடு செய்வதன்மூலம் யூதர்களைப்போல தங்கமும், புலம்பெயர்ந்த நாட்டுப் பொருளாதாரத்தில் ஆளுமை செலுத்தலாம் என்பதும் இன்னும் தமிழர்களுக்குக் கிடையாது. இதை அறியவே தமிழர்களுக்கு இன்னும் 25 வருடங்களாவது தேவைப்படுகிறது. அதுபோலவே மொழியை

**தமிழர்கள் புலம்பெயர்ந்த சூழலில்- தமது இருப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமானால், முதலில் அவர்கள் பொருளாதாரரீதியாக பலம்பெறவேண்டும்**

வளர்க்கும் சிந்தனையும் தமிழர்களுக்குக் கிடையாது. மற்ற இனத்தவர்களுக்கு இருக்கும் மொழிப்பற்றுடன் ஒப்பிடும்போது, தமிழர்களுக்கு அது இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

தமிழர்களைப் பொறுத்தவரை ஆங்கிலம் தான் 'தேவபாசை'. மற்ற ஐரோப்பிய மொழிகளில் உயர்கல்வி கற்று, அதிலுள்ள நல்ல விடயங்களை எல்லாம் தமிழுக்குக் கொண்டு வர வேண்டும் என்று எவராவது விரும்பினால், அவர் பிழைக்கத் தெரியாத பைத்தியக்காரன் என்றாகிவிடுகிறது.

தமிழையாவது வளர்க்கிறதாவது....? பிள்ளைக்கு தமிழ் படிப்பிக்கிறம். தமிழ் பாடசாலைகளுக்கு அனுப்புறம், நாட்டியம் படிக்கிறம். இதைவிட வேறு என்ன தமிழ் வளர்ச்சி வேண்டிக்கிடக்கு? தமிழைக் கதைக்கவும், எழுதவும் தெரிந்தால் போதும். இதுதான் இன்றைய புலம்பெயர்ந்த தமிழரின் தமிழ் அபிமானம்.

புலம்பெயர்ந்த தமிழரின் மூத்த தலைமுறையும் - இப்போது தலையெழுத்துள்ள இரண்டாவது தமிழ் பேசுகிறது, எழுதுகிறது. ஆனால், அடுத்துவரும் மூன்றாவது தலைமுறை.... ?

அது தமிழ் அடையாளத்துடன் இருக்குமா என்றால் - பேசும்.'. இருக்கும் என்று எம்மால் உறுதியாகச் சொல்லமுடியாது.

இதுதான் புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தின் மிகப்பெரிய அவலமாக இருக்கப்போகிறது.

**(முதல் பகுதி முற்றுப் பெறுகிறது)**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்*
*தாக்கற்குப் பேரும் தகைத்து*

திருக்குறள்

# நமது நோக்கு

## 'புதுடெல்கி' யின் விருப்பார்வம்...!

இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் - இன்னும்தெளிவாகக் கூறுவதானால், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளில், ஈடுபட இந்தியா விருப்பார்வத்துடன் இருப்பதாக இந்தியத் தூதுவர் நிருபம் சென் பம்பலப்பிட்டியில் உள்ள இந்துகலாசார நிலையத்தில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பாரம்பரியக் கலைகளின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் மேற்படி கலைகளுக்கான மேம்பாட்டுக் கழகத்திற்கு, ஒரு தொகுதி பாரம்பரிய இசைக்கருவிகளை வழங்கிப் பேசும்போதே அவர் இந்தக் கருத்தினை வெளிப்படுத்தும் வகையில் உரையாற்றியுள்ளார்.

உரிய வகையில் அழைப்பு விடுக்கப்பட்டால், வடக்கு - கிழக்கிலுள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அபிவிருத்திப் பணிகளில் தாங்களும் இணைந்துகொள்வதற்கு புதுடெல்கி தயாராகவிருக்கிறது என்பதே சென். அவர்களின் செய்திகூறும் கருத்தாகும்.

நிருபம் சென் ஊடாக வெளிவந்த புதுடெல்கியின் இந்தத் தகவலானது, காலம்கடந்த ஒன்றாக இருந்தாலும் வரவேற்கப்படக்கூடியதேயாகும். இத்தகையதொரு செய்தியைத் தெரிவிக்க கடந்த இரண்டாண்டுகால சமாதான முயற்சிகளின்போது, இந்தியாவால், ஏன் முடியாதுபோயிற்று என்ற கேள்வியும் இத்தருணத்தில் எழவே செய்கிறது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கியதேசிய முன்னணி அரசு கடந்த இரண்டாண்டுக்கும் அதிகமான காலமாக மேற்கொண்டுவந்த சமாதான முன்னெடுப்பு மற்றும் பேச்சுவார்த்தை தொடர்பான முயற்சிகளின் போது, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை உட்பட அனைத்து உலகின் சமாதானத்தை விரும்பிய நாடுகள் இலங்கையில் அதிலும் குறிப்பாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில், இரு தசாப்த காலப் போரால், அழிவுண்டு சிதைந்துபோன பகுதிகளில் புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான திட்டமிடல் பணிகளை ஆரம்பிக்கவும், தாமாக்வே முன்வந்து, இலங்கை அரசுடன் மட்டுமல்லாது விடுதலைப்புலிகளுடனும் கலந்துபேசி உடன்பாடுகளுக்கு வந்ததுடன், மேற்படி அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகளுக்கான செயற்பாடுகளை விடுதலைப்புலிகளுடன் இணைந்து மேற்கொள்ள உறுதியளித்தமையும் தெரிந்தவிடயங்களேயாகும்.

ஆனால், அப்போதெல்லாம் இந்த சமாதான முயற்சிகளின் ஒவ்வொரு கட்ட நகர்வு தொடர்பாக இந்திய அரசிற்கு இலங்கையும், சமாதான முயற்சிகளின் அனுசரணையாளராகச் செயற்பட்ட நோர்வேயும், ஜப்பான் அமெரிக்கா உட்பட ஏனைய நாடுகளும் உடனுக்குடன் அதற்குரிய ஆட்களை நேரில் அனுப்பி விளக்கங்கள் அளித்தபோதிலும், இந்தியா அந்த முயற்சிகளில் இருந்து அந்நியப்பட்டு நிற்கும் ஒரு போக்கையே கடைப்பிடித்ததுடன் சமாதான முயற்சிகளுக்கு தான் எதிர்ப்பற்ற முழுமையான ஆதரவை வழங்குவதாக ஒரு போதுமே வெளிப்படையாகத் தெரிவிக்கவுமில்லை.

மாறாக இந்தியா சமாதான முயற்சிகளை ஆதரிக்கின்றது என்ற கருத்தை அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகள் மூலமாகவே அறியக்கூடியதாகவும் இருந்தது.

இதேவேளை அந்தச் சமாதான முயற்சிகளில் தனது பங்கு எத்தகையது என்பதை ஒருபோதுமே இந்தியா வெளிப்படையாகத் தெரிவித்தது கிடையாது என்பதும் மறுக்க முடியாத உண்மையே.

சில வேளைகளில், சமாதான முயற்சிகளை ஆதரிப்பதாக ஒரு புறத்தே கூறிக்கொண்டு மறைமுகமாக அதனைக் குழப்பும் சில நுணுக்கமான நடவடிக்கைளில் அது ஈடுபட்டது என்றும் பரவலாகப் பேசப்பட்டதும் உண்டு.

உதாரணமாக வொஷிங்டன் உதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப்புலிகளைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்பதில் இந்தியாவே வடாப்பிடியாக இருந்ததாக விமர்சிக்கப்பட்டதையும் கூறலாம்.

எதுவானாலும், அந்த இரண்டாண்டு கால அமைதிச் சூழ்நிலையில் சமாதானம் குறித்த நம்பிக்கையை வலுப்படுத்த அவசியமாகத் தேவைப்பட்ட தமிழ்மக்களுக்கு சார்பான இந்திய ஆதரவுக்குரல் வெளிப்படையாய் இல்லாதது அதன் எதிர்காலம் குறித்த நம்பிக்கையீனத்தை உறுதிப்படுத்தவே செய்தது.

சமாதான முன்னெடுப்புக்கள் முக்கிய கட்டத்தை எட்டிய போது சமாதான எதிர்ப்புச் சக்திகளான ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற கட்சிகளுடனும் சமாதான முயற்சிகளை நிராகரித்த ஜனாதிபதியுடனும் மறைமுகமான தொடர்புகளை மேற்கொண்டிருந்ததாகவும் இந்தத் தொடர்புகள் மேற்படி முன்னெடுப்புக்களை மறைமுகமாகக் குழப்பும் தன்மை கொண்டதாகவே இருந்ததாகவும் கூட அரசியல் ஆய்வாளர்கள் விமர்சித்ததும் உண்டு.

எப்படியோ அந்தச் சமாதான முன்னெடுப்புக்கள் தடைப்பட்டு இப்பொழுது புதிய அரசு அதைத் தொடர முனைந்து செயற்படும் வேளையில், இந்தியாவின் விருப்பார்வம் குறித்த செய்தியை 'சென்' வெளியிட்டுள்ளார்.

ஆனால் அவர் 'அழைப்புக்கிடைத்தால் டெல்கி தயார்' எனக் கூறியுள்ளதில் தான் 'பொடி' வைத்துப் பேசியுள்ளார்.

அதனையும் தெளிவாகக் கூறியிருப்பாரேயானால் அந்த விருப்பார்வத்தின் நேர்மை மற்றும் விசுவாசம் குறித்த சந்தேகங்கள் தமிழ்மக்களிடம் இருந்து விடுபட்டிருக்கும்.

இந்தியா தமிழ்மக்களுக்கு உதவவேண்டும் அதுவும் விசுவாசமாக நேர்மையாக உதவவேண்டும் என்பதில் தமிழ்மக்கள் முரண்பாடான கருத்துக்களை ஒருபோதுமே கொண்டிருந்தது கிடையாது என்பதை நிருபம் சென் புரிந்து கொள்ள வேண்டும் - கொள்வாரென்றே நம்புவோமாக...

# நாடும் நடப்பும்




# அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியேறுவது குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலரிடம் விசாரித்து அறிவிப்பதாக அரச சட்டத்தரணி தெரிவிப்பு

யாழ்ப்பாணத்திலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத் தில் தம்மை மீள் குடியேற அனுமதிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த மூன்று மனுக்கள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா அடங்கலாக மூவர் அடங்கிய நீதியரசர் குழு முன்னிலையில் ஆராயப்பட்டது.

ஏனையவர்களைப் போல இந்த மனுதாரர்களும் அதே வசதிகளுடன் அங்கு குடியேறவும், விவசாயம் செய்யவும் அனுமதிக்கமுடியுமா என பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் விசாரித்து அறிவிப்பதாக சிரேஷ்ட அரச தரப்புச் சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, ஜே.ஏ.என்.டி. சில்வா, ஜெயசிங்க அடங்கலான நீதிபதிகள் குழு முன் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. அப்போதே, அரச தரப்புச் சட்டத்தரணி இதனை அறிவித்தார்.

யாழ். மாவட்ட எம்.பி. மாவை சேனாதிராஜா, தெல்லிப்பளையைச் சேர்ந்த சின்னப்பு சிவஞானசம்பந்தர், அளவெட்டியைச் சேர்ந்த வ.இராஜதுரை ஆகியோர் தாக்கல் செய்திருந்த மனுக்களில் பாதுகாப்பு அமைச் சரான ஜனாதிபதி சந்திரிகா, இராணுவத் தளபதி லயனல் பலகல்ல ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப் பட்டிருந்தனர்.

இராஜதுரை தாக்கல் செய்திருந்த மனுவில் - தான் நீண்ட காலமாக அளவெட்டியில் வசித்து வந்ததாகவும், 1992 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இராணுவம் தம்மைப் பலவந்தமாக வெளியேற்றியதாகவும் தெரிவித்தார்.

தான் விவசாயம் செய்து மாதாந்தம் 20 ஆயிரம் ரூபா வருமானம் பெற்றதாகவும், ஆனால், தற்போது அகதிமுகாமில் தங்கிவருவதால், முழுக் குடும்பத்திற்கும் மாதாந்தம் 1008 ரூபா பெறுமதியான உலர் உணவு வழங்கப்படுவதாகவும் மனுதாரர் கூறினார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் அங்கு செல்லத் தயாரானாலும், இராணுவம் தடுப்பதாகவும் இதனால், தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் மனுவில் கூறியுள்ளார்.

அதியுயர் பாதுகாப்பு வலயம் என்றுகூறி இராணுவம் தங்களை அங்கு மீளக் குடியமர அனுமதிக்காதிருப்பதாகவும், யாழ்ப்பாணத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயம் கிடையாது எனவும் மாவை சேனாதிராஜாவின் மனுவில் கூறப்பட்டுள்ளது.

தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்க உத்தரவிடுமாறு கோரப்பட்ட இந்த மனுக்கள் மீதான விசாரணை ஜூலை 26 ஆம் திகதி ஆராயப்படவுள்ளன.

## சுமார் 10 ஆயிரம் வழக்குகள் மேன்முறையீட்டு நீதிமன்றில் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் சுமார் 10 ஆயிரம் வழக்குகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தேங்கிக் கிடப்பதாக நீதியமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார். இதனை நிவர்த்தி செய்வதற்காக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அமைச்சர், இரசாயன பகுப்பாய்வு அறிக்கைகளின் தாமதம் காரணமாக சுமார் 23 ஆயிரம் வழக்குகள் முன்னெடுக்கமுடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவித்தார். இதனை நிவர்த்தி செய்யும் வகையில் விரைவில் மாவட்ட ரீதியில் இரசாயன பகுப்பாய்வு மையங்களை அமைக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

## வைத்தியசாலை சென்ற மனைவி இதுவரை வீடு திரும்பவில்லை

### மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

நல்லூரைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாய் ஒருவரைக் கடந்த இரண்டு தினங்களாகக் காணவில்லை என அவரது கணவர் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

நல்லூர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 38 வயதான ராஜ்குமார் ஜெனிற்றா சுபோதினி என்பவரே காணாமற்போனவர் ஆவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

கடந்த திங்கட்கிழமையன்று சுகவீனம் காரணத்தினால், யாழ். போதனா வைத்தியசாலைக்கு மருந்து எடுப்பதற்குச் செல்வதாகக் கூறிவிட்டு காலை 10 மணியளவில் வைத்தியசா லைக்குச் சென்ற ஐந்து பிள்ளைகளின் தாயாரான மேற்படி நபர், இதுவரை வீடுவந்து சேரவில்லை என, சுபோதினியின் கணவர் ராஜ்குமார் யாழ். மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

# மட்டு. படுகொலைகள் குறித்து விசாரிக்க விசேட பொலிஸ் குழுவொன்று நியமனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் கொலைகள் குறித்து விசாரணை செய்ய விசேட பொலிஸ குழுவொன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்துள்ளார். அந்தக் குழுவின் அறிக்கை வெளிவரும்வரை யார் மீதும் குற்றம் சுமத்தமாட்டோம். இந்த நடவடிக்கைகள் அரசின் சமாதான முயற்சிகளைப் பாதிக்காது.

சுதந்திர முன்னணி அரசாங்கம், கடந்த அரசாங்கத்தை விடச் சிறந்த முறையில் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் என வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்த மீறல்களை நாம் அனுமதிக்கமாட்டோம். அதேவேளை, யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்கமும் இல்லை. கடந்த அரசின் காலத்தில் இராணுவத்தினருடன் இணைந்த 52 புலனாய்வு அதிகாரிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஆனால், நாம் மௌனம் சாதிக்கவில்லை. அதனைத் தடைசெய்ய நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றோம்.

கொழும்பில் 600 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும் யூரியா உரம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 1000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கம் உரத்திற்கு அறவிடும் வரியை ரத்துச் செய்தால், கொழும்பு விலைக்கே விற்பனை செய்யத் தயாராக இருக்கிறோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அயலக அரசியல் நோக்கு

மெல்போர்னிலிருந்து சபேசன்

# எதிர்பார்ப்பு - ஓர் எழுதப்படாத புரிந்துணர்வு ஒப்பந்தம்

இந்தியப் பொதுத்தேர்தலின் பெறுபேறுகள் கொண்டு வந்துள்ள ஆட்சி மாற்றம், பலருடைய புருவங்களை உயர்த்தியுள்ளது. சோனியா காந்தியின் தலைமையிலான காங்கிரஸ் கூட்டணி, அறுதிப் பெரும்பான்மையினை பெறாதுவிட்டாலும், அதிகூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டதாகத் திகழ்கின்றது.

கம்யூனிஸ்ட் மற்றும் சில வட இந்திய அரசியல் கட்சிகளின் ஆதரவுடன், காங்கிரஸ் கட்சிக் கூட்டணியே இந்தியாவின் புதிய அரசாங்கத்தை அமைக்கக்கூடியதாகவுள்ள இந்தச் சூழ்நிலையில், எம்மவர்கள் மத்தியில் - குறிப்பாகப் புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள் மத்தியில் ஒரு கேள்வி எழுந்துள்ளதை நாம் காண்கின்றோம்.

இந்தக் கேள்வியானது இலங்கைப் பத்திரிகைகள் ஊடாகவும், இணையத்தளங்கள் ஊடாகவும் பூதாகரமாகப் பெரிதுபடுத்தப்பட்டு வருவதையும் நாம் அவதானிக்கின்றோம். இன்றைய தினம் இந்தக் கேள்விக்குரிய பதிலைத் தெரிந்து கொள்வதிலேயே, எம்மவர்களில் பலர் தங்கள் மூளைகளைக் கசக்கிப் பிழிந்து களைத்துப் போவதையும் நாம் கவனிக்கின்றோம்.

சோனியா காந்தியின் புதிய அரசு - ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு விடிவை, விமோசனத்தைப் பெற்றுத்தருமா?

இந்தக் கேள்விக்குரிய அல்லது



எதிர்பார்ப்புக்குரிய அல்லது அங்கலாய்ப்புக்குரிய பதிலை இன்று எம்மவர்களில் பலர் எதிர்பார்த்து ஏங்கியிருப்பதனை இன்று உலக ஊடகங்கள் ஊடாக நாம் அவதானிக்கக் கூடியதாக இருப்பது என்னவோ உண்மைதான்.

இந்தக் கேள்விக்குரிய பதிலைத் தேடுவதற்கு முதல் - இந்தக் கேள்வியே அவசியம்தானா? - என்ற வினாவிற்கு விடை தேடுவதுதான் எமக்கு முக்கியமானதாகப்படுகின்றது. அதன அடிப்படையில் இந்த விடயத்தைத் தர்க்கிப்பதோடு மட்டுமல்லாது, வேறு சில கருத்துக்களையும் முன்வைத்து விவாதிக்க விழைகின்றோம்.

ஆயிரக்கணக்கான ஆண்டு காலமாக அடிமைப்பட்டு வாழ்ந்த காரணத்தினாலோ என்னவோ, எம்மில் பலரின் மரபணுக்களில் அடிமைச் சிந்தனை என்பது வேரோடிப்போய்விட்டது என்று எண்ணி வருந்திச் சிந்திக்கின்றோம்.

உள்ளூரோ, உள்நாடோ, வெளியூரோ, வெளிநாடோ எதுவாக இருந்தாலும் - அந்த அந்த நாடுகளில் ஏறபடும் அரசியல் மாற்றங்கள் எமது ஈழத் திருநாட்டிற்கு உதவுமா அல்லது உதைக்குமா என்று எண்ணி அங்காலயப்பது மட்டும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இந்த வேளையில் சில கருத்துக்களை எமது நேயர்கள் முன் வைக்க விரும்புகின்றோம்.

தமிழீழ விடுதலைப் போரட்டம் எத்தனையோ சோதனைகளையும், வேதனைகளையும், திருப்புமுனைகளையும், தியாகங்களையும் சந்தித்துத்தான் முன்னேறி வந்திருக்கின்றது, வருகின்றது. அன்று ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட எம்மின மக்கள் - ஓர் இரவில் அகதிகளாக அல்லலுற்று இடம்பெயர்ந்தபோது, எந்த உலக நாடும் உதவிக்கரம் நீட்டி ஓடி வரவில்லை.

ஆனால், இன்றோ ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகள் - நிதியுதவி செய்வதற்காக தமிழீழத்தின் கதவுகளைத் தட்டி நிற்கின்றன. தமிழீழ மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்கும்படி இலங்கை அரசை இந்த நாடுகள் இன்று வற்புறுத்தி நிற்கின்றன.

இன்று இவ்வாறு உலக நாடுகள் பலவற்றில் ஏற்பட்டுள்ள மனமாற்றத்திற்குக் காரணம் என்ன? அந்த நாடுகளில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களா? இல்லை. இல்லவேயில்லை. அதற்குரிய அடிப்படைக் காரணமும், முதன்மைக் காரணமும் தமிழீழத்திலேதான் உள்ளது. தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னின்று நடாத்திச் செல்கின்ற தமிழீழ விடுதலைப புலிகள் இயக்கம் - இன்று மிகப்பெரிய பலம்மிக்க சக்தியாகச் செயல்பட்டு வருகின்றது.

இராணுவப் பலமும் அரசியல் பலமும் ஒருங்கே கொண்டதொரு விடுதலை இயக்கமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் திகழ்கின்றது. தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை, சுதந்திரப் போரட்டத்தை இனிமேல் ஒடுக்கவோ, தடுக்கவோ முடியாது என்ற யதார்த்த நிலைய்யை இன்று இலங்கை அரசு மட்டுமல்ல, அதற்கு ஆதரவாகச் செயற பட்ட உலக நாடுகளும் உணர்ந்து நிற்கின்றன.

அதன் அடிப்படையிலேயே இநத மனமாற்றத்துக்கான காரணிகளை நாம் சிந்திக்க வேண்டும். ஆகவே, இலங்கையில் அரசுகள் மாறினாலும் சரி, இந்தியாவில் அரசுகள் மாறினாலும் சரி, உலக நாடுகளில் பல அரசுகள் மாறினாலும் சரி, இல்லை செவ்வாய்க்கிரகத்திலும் ஏதேனும் மாற்றங்கள் வந்தாலும், சரி தமிழீழம் பலமாக இருக்கும் வரையில் அவை



பாதிப்பைத் தரப்போவதில்லை என்பதே நிதர்சனமாகும். அந்த வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் - அதன் தன்னிகர் இல்லாத் தலைமையுடனும், பலத்துடனும் இருப்பதானது தமிழீழத்திற்கு வளமான வாழ்வைப் பெற்றுத்தரும் என்பதே யாதார்த்தமாகும்.

எனினும், இந்தியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் குறித்து தர்க்கரீதியாக நாம் கவனம் செலுத்த வேண்டியதும் அவசியமான ஒன்று. இவ்விடயங்கள் குறித்து எமக்குத் தெளிவான பார்வை இருந்தால், எதிர்கால சலசலப்புகள் குறித்து நாம் கவலைப்பட வேண்டி வராது.

ஒருநாட்டின் அரசியலில் கட்சிகளின் ஆட்சி கைமாறும்போது, பொதுவாக அந்த நாட்டின் வெளிவிவகாரக் கொள்கைகளில் பெரிதான மாற்றங்கள் ஏற்படுவதில்லை என்பதுதான் உண்மை. அதிலும் அந்த நாடு ஒரு வல்லரசாக இருக்கும் பட்சத்தில், அந்த நாட்டின் வெளிவிவகாரக் கொள்கைகளில் மாற்றம் ஏற்படுவது அரிதான விடயமாகவே இருக்கும்.

எனினும், அண்டை நாடான இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைளை நாம் அரசியல்ரீதியாக மட்டுமல்லாது - புவியியல், பொருளாதாரவியல் ரீதியாகவும் கவனித்துச் சிந்திக்கவேண்டும்.

சோனியா காந்தியின் அன்புக்குரிய மாமியார் இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தில், அவர் தமிழ்ப் போராளி இயக்கங்களுக்கு ஆதரவும், இராணுவப் பயிற்சியும் கொடுதது வந்தார் என்பது வெளிப்படையான இரகசியமாகும்.

அத்துடன், அன்றைய இலங்கை அரசு தமிழீழ மக்கள் மீது மேற்கொண்ட அரச பயங்கரவாத இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிராக இந்திரா காந்தி அறிக்கைகள் வெளியிட்டு வந்ததோடு, இலங்கை அரசு மீது அரசியல் அழுத்தத்தையும் பிரயோகித்து வந்தார். இந்திரா காந்தியின் இந்த நடவடிக்கைகள் காரணமாக தமிழீழ மக்கள் அவர் மது மிகுந்த நம்பிக்கையையும், எதிர்பார்பையும் கொண்டிருந்தார்கள்.

அப்படியென்றால், அன்று இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தில் இருந்த இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கைக்கும், இப்போது இந்தியா கொண்டிருக்கும் வெளிவிவகாரக் கொள்கைக்கும் (முக்கியமாக ஈழத் தமிழ் மக்கள் பிரச்சினையில்) வித்தியாசம் இருக்கின்றதே என்ற கேள்வி எழுவது இயல்பானதாகும்.

ஆனால், கூர்ந்து ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையின் அடிபபடை நோக்கத்தில் மாற்றம் எதுவும் ஏற்படவிலலை என்ற உண்மை புலனாகும்.

அன்றைய அரசு - ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் அரசு. இந்திய எதிர்ப்புப் போக்கைக் கொண்டிருந்ததோடு மட்டுமல்லாது - பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளுடன் நெருங்கிய நட்புறவையும் கொண்டிருந்தது.

இந்திரா காந்தியின் அரசு - அன்று வல்லரசாகத் திகழ்ந்த சோவியத் ரஷ்யாவுடன் மிகுந்த நட்புறவைக் கொண்டிருந்தது. இதன் காரணமாக அமெரிக்கா போன்ற நாடுகளின் தலையீடும், செல்வாக்கும் இலங்கையில் அதிகரித்து வருவதை தனக்கு ஒர் அச்சுறுத்தலாகவே அன்றைய இந்திய அரசு கருதியது. அந்த வேளையில் இலங்கை விவகாரத்தில் தன்னுடைய மூக்கை நுழைப்பதற்கு இந்தியாவிற்குக் கிடைத்த வரப்பிரசாதமாக ஈழத்தமிழர் பிரச்சினை விளங்கியது. அதனைப் பயனபடுத்தும் முயற்சியில் இந்திரா காந்தி இறங்கி, தமது பிராந்திய மேலாண்மையை நிலைநிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்.

'ஈழத்தமிழர் போராட்டமானது, ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அரசுக்குத் தீராத தலையிடியை உருவாகுவதன் மூலம் ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் அரசு - இந்தியாவின் உதவியை நாடி வரவேண்டும் என்றே இந்திரா காந்தி விரும்பினார். அதுவே உண்மையுமாகும்.

இந்திரா காந்தி கொலை செய்யப்பட்ட சில மாதங்களின் பினபு அவருடைய அரசியல் வாழ்க்கைச் சரிதம் குறித்த ஒரு புத்தகம் வெளிவந்தது. அதனை எழுதியவர் இந்திரா காந்தியின் தனிப்பட்ட செயலாளர் ஆவார். அவர் இலங்கை அரசு குறித்தும், தமிழர் பிரச்சினை குறித்தும், தமிழ்ப் போராளி இயக்கங்கள் குறித்தும் இந்திரா காந்தி கொண்டிருந்த சிந்தனைகளை விபரித்து எழுதியுள்ளார். அவர் எழுதியிருந்த விடயங்களில் சிலவற்றையே நாம் இப்போது சுட்டிக் காட்டியிருந்தோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் குறித்து இந்திரா காந்தி கொண்டிருந்த கணிப்பையும், அவரது தனிப்பட்ட செயலாளர் தன்னுடைய நூலில் அன்றே குறிப்பிட்டிருக்கின்றார். ஏனைய தமிழ்ப் போராளிக் குழுக்களையும் விட, தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்க உறுப்பினர்கள் தனித்துவமாகவும், கொள்கைப்பிடிப்பு உள்ளவர்களாகவும், கட்டுக் கோப்பாகவும் உள்ளார்கள்.

எதிர்காலத்தில் புலிகள் இந்தியாவின் அழுத்தத்திற்குப் பணியமாட்டார்கள். ஏனென்றால், 'விடுதலைப் புலிகள் இயக்கம் தன்னுடைய இலட்சியத்தில் உறுதிகொண்ட இயக்கமாக வளர்ந்து வருகின்றது' என்று இந்திரா காந்தியின் எண்ணங்களை தனிப்பட்ட செயலாளர் தன்னுடைய நூலில் எழுதியுள்ளார்.

எனவே, தன்னுடைய பிராந்திய மேலாண்மை கருதியும், பொருளாதார முன்னேற்றம் கருதியும் இந்தியா - இடப் பக்கமும், வலப்பக்கமும் சாயும். இந்தியா எப்பக்கம் சாய்ந்தாலும், அதில் இந்தியாவின் நலனுக்கே முன்னுரிமை இருக்கும். அதுவே இந்தியாவின் வெளி விவகாரக் கொள்கையின் அடிப்படைவாதமுமாகும்.

அந்தத் தர்க்கத்தின் அடிப்படையிலேயே, இந்தியாவின் எதிர்கால நடவடிக்கைகளை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். இன்று இலங்கைத்தீவின் அரசியல் - இராணுவக் களங்களில், தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் சம பங்காளிகளாக இருக்கும் நிலை உருவாகியுள்ளது.

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே என்கின்ற உண்மை இன்று நிரூபிக்கப்பட்ட விடயமாகிவிட்டது. இந்த நிலையில் தன்னுடைய வெளிவிவகாரக் கொள்கையை இந்தியா எவ்வாறு கையாளப்போகின்றது என்பதே இப்போதைய எதிர்பார்ப்பாகும்.

மதவாதத்தை முன்வைத்து ஆட்சி நடாத்திய முன்னைய அரசான பி.ஜே.பி கூட்டணி - ஈழத்தமிழர் நலனுக்கு எதிராகச் செயற்பட்டதை நாம் அறிவோம். இலங்கைத்தீவின் அரசியல் களம் மாற்றம் அடைந்துள்ள வேளையில், மே மாத மாற்றத்தோடு அரசுக்கு வரும் சோனியா காந்தியின் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி, இலங்கைப்பிரச்சினையில் நேரடியாக தலையீடு செய்யாமல், மறைமுகமான பங்களிப்பைச் செய்யக்கூடும் என்பதே இப்போதைய நோக்காக இருக்கின்றது.

சோனியா காந்தியின் காங்கிரஸ் கட்சியோடு, தமிழகத்து திராவிடக் கட்சிகள் - தேர்தல் கூட்டு வைக்கும் காலம் எதிர்காலத்தில் ஏற்படலாம் என்று நாம் 2002 ஆம் ஆண்டு கூறிய போது, அதனை ஏற்க மறுத்துப் பல வலுவான காரணிகளை அன்பர்கள் பலர் எமக்கு கூறியிருந்தார்கள்.

'அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை, நிரந்தர எதிரிகளும் இல்லை' என்பதையே இந்த வெற்றி பெற்ற கூட்டணி நிரூபித்து நிற்கினறது. இதன் அடிப்படையிலேயே, சோனியா காந்தியின் தலைமையில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அமைத்தால், இலங்கைப்பிரச்சினை குறித்த இந்தியாவின் அணுகுமுறை எவ்வாறு இருக்கும் என அன்று தர்க்கித்திருந்தோம்.

இந்தக் கருத்துக்களை பின்புலமாக வைத்துக்கொண்டு, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லகஸமன் கதிர்காமருடைய தற்போதைய அறிக்கைகளை நாம் கவனத்தில் கொள்ள விளைகின்றோம்.

அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில், கதிர்காமர் கூறிய சில கருத்துக்கள் - இலங்கை அரசின் நம்ப

**தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே என்கின்ற உண்மை இன்று நிரூபிக்கப்பட்ட விடயமாகிவிட்டது. இந்த நிலையில் தன்னுடைய வெளிவிவகாரக் கொள்கையை இந்தியா எவ்வாறு கையாளப் போகின்றது என்பதே இப்போதைய எதிர்பார்ப்பாகும்.**

**மதவாதத்தை முன்வைத்து ஆட்சி நடாத்திய முன்னைய அரசான பி.ஜே.பி கூட்டணி - ஈழத்தமிழர் நலனுக்கு எதிராகச் செயற்பட்டதை நாம் அறிவோம். இலங்கைத்தீவின் அரசியல் களம் மாற்றம் அடைந்துள்ள வேளையில், மே மாத மாற்றத்தோடு அரசுக்கு வரும் சோனியா காந்தியின் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி, இலங்கைப் பிரச்சினையில் நேரடியாக தலையீடு செய்யாமல், மறைமுகமான பங்களிப்பினை செய்யக்கூடும் என்பதே இப்போதைய நோக்காக இருக்கின்றது.**

த்தன்மை குறித்து மீண்டும் சந்தேகத்தை எழுப்பியுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின் அமுலாக்கம் குறித்தே பேச்சுவார்தைகளின் முதற்கட்டம் அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பில், சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வேளையில், கதிர்காமர் இந்தத் தன்னாட்சி அதிகாரசபைத்திட்டம் குறித்து காட்டமான கருத்துக்களை தெரிவித்தார்.

இந்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத்திட்டத்தை ஏற்பது, இலங்கை போன்ற இறையாண்மையுள்ள நாட்டிற்கு கடினமான ஒன்றாகும். எதிர்காலத் தனியரசு ஒன்றுக்கான திட்டம் தான் இது என்று கதிர்காமர் கூறிய கருத்து, சமாதானப் பேச்சு முயற்சிகளில் அவநம்பிக்கையை ஏற்படுத்துவதாக உள்ளது.

அது மட்டுமல்லாது, சோனியா காந்தி பிரதமராக வரும்பட்சத்தில், பிரபாகரனை நாடு கடத்தும் கோரிக்கையை இந்தியா முன்வைக்கக் கூடும் என்ற கருத்துப்பட கதிர்காமர் பேசியுள்ளார்.

இந்தியத் தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கு முன்னரேயே,



அவசர அவசரமாக பி.ஜே.பி அரசைச் சந்தித்து, இலங்கை அரசுக்கான ஆதரவை கோரிவந்தவர்தான் கதிர்காமர்.

இன்று இந்திய அரசாங்கத்தை சோனியா காந்தியின் அரசியல் கூட்டணி அமைக்கப்போகின்ற நிலையில், தமிழர்களுக்கு எதிராக இந்தியாவை நோக்க வைக்கின்ற முயற்சியில் கதிர்காமர் ஈடுபட்டுள்ளார். இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையானது, தற்போதைய காலகட்டத்தில் இலங்கைப்பிரச்சினையை எவ்வாறு அணுகக்கூடும் என்று நாம் இப்போது முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் கதிரகாமரின்- இந்த 'நாடு கடத்தும்' புரளியை நாம் சிந்திக்கவேண்டும்.

இந்திய ஆட்சி மாறிய உடனேயே, இப்படிப்பட்ட குழப்பத்தை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் கதிர்காமருக்கு ஏற்பட்டு இருப்பதனை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இந்திய அரசின் நிலைப்பாடு மாறப் போகின்றது என்ற உள்ளுணர்வுதான் இவ்வாறு கதிர்காமர் அவர்களை அவசரப்படுத்தியதோ என்னவோ.

முன்பு ஆட்சியிலிருந்த பி.ஜே.பி அரசானது ஒரு மதவாத அரசாக விளங்கியது. இப்போது இலங்கை ஆட்சி அமைத்துள்ள அரசும் ஒரு மதவாத அரசாகும். மதங்கள் வேறுபட்டதாக இருந்தாலும், அடிப்படை மதவாதக் கொள்கையிலும், தீவிரத்திலும் இவை ஒத்துப்போகக் கூடியவை. முதலாளித்துவமும், முதலாளித்துவமும் ஒத்துப் போகின்றது போல் - மதவாதமும் தனக்குள் ஒத்துப்போகும்.

ஆனால், சோனியா காந்தியின் காங்கிரஸ் கூட்டணி அமைக்கவிருக்கும் ஆட்சி -மதசார்பற்ற அரசாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையும், 'எந்த மதத்திற்கும் முதலிடம் வழங்கப்பட மாட்டாது' என்றே குறிப்பிட்டு நிற்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் நாம் முன்னர் குறிப்பிட்டதுபோன்று இராணுவப்பலமும், அரசியல்பலமும் பொருந்தி, இலங்கை அரசோடு சமபங்காளியாக இருக்கும் நிலை உருவாகியள்ளது.

இப்படியான நிலை விடுதலைப் புலிகளுக்கு சாதகமாக இருப்பதனை உணர்ந்துகொண்ட கதிர்காமரின் மூளை - இப்போது முன்னைவிட அதிகமாக செயற்பட தொடங்கியிருக்கிறது.

இன்றைய யதார்த்த நிலையைச் சரியாகப் புரிந்து, அதற்கேற்ற தகுந்த நடவடிக்கைகளை சோனியா காந்தியின் தலைமையிலான கூட்டணி அரசு எடுக்குமென்று நாமும் உளமார விரும்புகின்றோம். இந்த அணுகுமுறையானது, சோனியா காந்தியின் தமிழக செல்வாக்கை அதிகரிக்கச் செய்வதோடு, ஈழத் தமிழர்களோடும் ஓர் எழுதப்படாத புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உருவாக்கும் என்றும் கூறலாம்.

கதிர்காமர் போன்றோர் ஏற்படுத்தும் சலசலப்புகளுக்கு, இந்தியா மட்டுமல்ல புலம்பெயர்ந்த தமிழீழத்தவர்களும் இடம்கொடுக்கக்கூடாது என்பதே எமது அவா ஆகும்.

# ஆப்கான் எல்லையில் தாக்குதல் 20 தலிபான் போராளிகள் பலி!



(காபுல்)

பாகிஸ்தான் எல்லையில் அமைந்துள்ள ஆப்கானிஸ்தானில் 20 தலிபான் போராளிகள் - அமெரிக்க கூட்டுப்படையினால் கொல்லப்பட்டுள்ளதாக ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஸ்பின் பொல்ஷாக் என்ற எல்லைப் பிரதேசத்தில் அமைந்துள்ள தலிபான் தீவிரவாதிகளின் முகாம் ஒன்றின்மீது, 150 அரச படையினர் நேற்றுமுன்தினம் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

அமெரிக்க குண்டுவீச்சு விமானங்கள் தலிபான் நிலைகள்மீது தாக்குதல் மேற்கொண்டிருந்தாக ஆப்கான் இராணுவ அதிகாரி கான் மொக்மட் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் அமெரிக்கப் படையினருக்கு சேதம் ஏற்படவில்லை. ஆனால், 20 தலிபான் போராளிகளின் உடல்களைக் காணநேர்ந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

3 மணிநேரம் நீடித்த மோதலில் 3 தலிபான் படையினர் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்ட தலிபான் பேராளிகளில் இருவர் அந்த அமைப்பின் கட்டளை அதிகாரிகளான கூரி பெஷ்சுல்லா, கூரி அலி மொகமட் என ஆப்கான் புலனாய்வு அதிகாரி தெரிவித்தார்.

போர்நடவடிக்கை தொடர்வதாகவும், பாகிஸ்தான் எல்லையைநோக்கி போராளிகள் விரட்டப்பட்டுவருவதாகவும் புலனாய்வு அதிகாரியான அப்துல்லா லக்மனை - ஏ.எவ்.பி செய்தி ஸ்தாபனத்திற்குத் தெரிவித்தார்.

அண்மைக்காலத்தில் தலிபான் போராளிகளின் தாக்குதல்கள் ஆப்கானில் அதிகரித்துள்ளன. ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமிட் ஹர்சாயை பதவியிலிருந்து அகற்றும்வரை தாம் போராடவுள்ளதாகவும் தலிபான் போராளிகள் தெரிவித்தனர்.

# செழிப்புமிக்க ரஷ்யாவை புடின் உருவாக்குவாராம்!



(மொஸ்கோ)

ரஷ்ய ஜனாதிபதி புடின் - மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின்னர் நிகழ்த்திய முதலாவது உரையில், செழிப்புமிக்க நவீன ரஷ்யாவை உருவாக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

ரஷ்ய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், நிலையான ஜனநாயக அமைப்புமிக்க ரஷ்யாவை உருவாக்குவதுமே தமது முக்கிய பணியெனவும் குறிப்பிட்டார்.

2010 ஆம் ஆண்டில் ரஷ்யாவின் பொருளாதாரத்தை இருமடங்காக அதிகரிக்கவுள்ளதாகவும் -

ரஷ்ய தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட நாடாளுமன்ற உரையில் புதிய வீடுகளை அமைக்கவுள்ளதாகவும், நீண்டகால கடன் வசதிகள்மூலம் வீடுகளை மக்கள் வாங்கிக்கொள்ள முடியும் எனவும் -

உயர்கல்வி, சுகாதாரம் ஆகியவற்றை மேம்படுத்தவுள்ளதாகவும், சோவியத் ஒன்றியம் உடைந்தபின் முப்பது மில்லியன் மக்கள் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்வதாகவும், சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடவுள்ளதாகவும் புடின் மேலும் தெரிவித்தார்.




## ஈராக்கில் கட்டுமானப் பணியிலீடுபடும்

# ரஷ்ய பணியாளர்களை வெளியேற்றுவதற்கு முடிவு!



ஈராக்கில் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டிருந்த ஒரு நிறுவனம், தனது பணியாட்களை ஈராக்கிலிருந்து வெளியேற்றுவதற்குத் தீர்மானித்துள்ளது.

வாகனமொன்றில் தமது வேலைத்தளத்திற்குப் பிரயாணம் மேற்கொண்டிருந்தவேளையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 2 ரஷ்யர்கள் கொல்லப்பட்டும் 6 பேர்வரை காயமடைந்தும் உள்ளனர்.

இந்தச் சம்பவத்தின்போது முகமூடிதரித்த துப்பாக்கிதாரிகள் வேலைத்தளத்தின் வாசலில் தாக்குதலை மேற்கொண்டிருந்ததாக ரஷ்ய தொலைக்காட்சி தெரிவித்தது. காயமடைந்தவர்களில் சிலர், ஆபத்தான நிலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க கூட்டுப்படையில் ரஷ்யா பங்குகொள்ளவில்லை. ஈராக்கின் எரிசக்தி வளத்தை அபிவிருத்தி செய்வதில், ரஷ்ய தொழிலாளர்கள் பங்காற்றிவருகின்றனர். அத்துடன் ரஷ்ய தொழில் விற்பன்னர்கள் ரஷ்யாவின் எரிசக்தி உட்கட்டமைப்பு ஆகியவற்றை விருத்தி செய்வதில் பெரும்பங்காற்றிவருகின்றனர்.

சென்றமாதம் தனது 365 பிரஜைகளை ஈராக்கிலிருந்து ரஷ்யா வெளியேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே புனித நகர் நஜாப்பில் அமெரிக்கப் படையின் ஹெலிகொப்டர்களும், தாங்கிகளும் மேற்கொண்ட தாக்குதல்களில் 4 பொதுமக்கள் கொல்லப்பட்டும் 29 பேர்வரை காயமடைந்துமுள்ளனர்.

## டொமினிக்கன் குடியரசில்—

# வெள்ளம் மண்சரிவினால் ஐநூறுக்கும் மேல் மக்கள் பலி

வெள்ளம், மண்சரிவு ஆகிய அனர்த்தங்களினால் ஐந்நூறுக்கும் மேற்பட்ட மக்கள் கெயிட்டி, டொமினிக்கன் குடியரசு ஆகிய நாடுகளில் உயிரிழந்துள்ளனர்.

பெருந்தொகையான மக்கள் காணாமற்போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாட்டிலும் பதின்மூவாயிரம் மக்கள் வீடுகளை இழந்துள்ளதாக டொமினிக்கன் குடியரசின் அவசரகாலப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கெயிட்டியில் நிலைகொண்டுள்ள அமெரிக்க, கனேடிய படையினர் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இரண்டு நாட்கள் நடந்த கடும் மழைக்குப்பின்னரே வெள்ள அழிவுகள் ஏற்பட்டிருந்ததாகவும், கடந்த 100 ஆண்டுகளில் ஏற்பட்டிருந்த மோசமான பாதிப்பு இதுவெனவும் தெரிவிக்கப்படுகிறது.

டொமினிக்கன் பெண் ஒருவர் தெரிவித்த கருத்தில், தனது இரு பிள்ளைகளையும் காப்பாற்ற முயற்சித்தும், வெள்ளம் அவர்களை இழுத்துச்சென்றுள்ளதாகக் குறிப்பிட்டார்.

தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள பிரேத அறைகளில் இறந்த உடல்கள் குவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இறந்த உடல்கள் அதிகரித்து வருவதால், நோய்கள் பரவும் அபாயம் காரணமாக பொதுவான சவக்குழிகளில் இறந்த உடல்கள் புதைகக்கப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

டொமினிக்கன் குடியரசில் அமைந்துள்ள ஜிமானி நகரில் இரு ஆறுகள் உடைத்து பாய்ந்ததால்



பல வீடுகள் சிதைக்கப்பட்டுள்ளதாகவும் 110 பேர்வரை கொல்லப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நகரில் 200 மக்கள் காணாமல்போயுள்ளதாகவும், படையினர் உயிர்தப்பியுள்ளவர்களை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இஸ்ரேலில் அமைந்துள்ள

# அவுஸ்ரேலிய தூதரகம் மீதான தாக்குதல் மதத்தலைவர் அபூபக்கரால் தடுக்கப்பட்டது!



(டெல்அவிவ்)

இஸ்ரேலில் அமைந்துள்ள அவுஸ்ரேலிய தூதுவராலயத்தன் மீதான தாக்குதல் இந்தோனேசிய மதத்தலைவர் அபூபக்கர் பாஷ்யீரினால் தடுக்கப்பட்டதாக நீதிமன்ற விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

அவுஸ்ரேலிய தூதுவராலய தாக்குதலில் சம்பந்தப்பட்ட குற்றாவாளியான ஜாக் ரோச்சி தெரிவிக்கும்போது - மத்தலைவர் பஷயீர் அத்திட்டத்தை கைவிடுமாறு தெரிவித்ததாக குறிப்பிட்டிருந்தார். அத்துடன் தீவிரவாதக் குழுவான ஜெமா இஸ்லாமியாவின் அங்கத்தவர்களிடையே தோன்றிய போரையும், மத்தலைவர் தலையிட்டுத் தடுத்ததாகவும் ஜாக ரோச்சி குறிப்பிட்டார்.

ஜெமா இஸ்லாமியாவின் தொடர்புடையவர் எனக் கருதப்பட்டு இந்தோனேஷிய சிறையில் மதத்தலைவர் பஷ்யீர் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசாரணையில் அவுஸ்ரேலியா, கம்பாலி, மலேசியா ஆகிய நாடுகளில் செயற்படும் ஜெமா இஸ்லாமியாவின் உள்ளூர் தலைவர்களிடையே, இஸ்ரேலில் அமைந்துள்ள அவுஸ்ரேலிய தூதுவராலயத்தின் மீதான தாக்குதலை மேற்பார்வை செய்தவர் யார் என்பதில் சந்தேகம் உள்ளதாகவும் ஜாக் ரோச்சி தெரிவித்தார்.

இந்தோனேசிய பொலிஸார் - நீண்டகாலமாகவே அபூபக்கருக்கும், ஜமா இஸ்லாமிய அமைப்புக்குமிடையேயுள்ள தொடர்பினை அறிவதற்கு முயற்சிகள் மேற்கொண்டுவருகின்றனர்.

பல தாக்குதல்களுக்கு குறிப்பாக பாலி குண்டுவெடிப்பிற்கும், ஜெமா இஸ்லாமியாவிற்கும் தொடர்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜாக் ரோச்சி 2002 ஆம் ஆண்டு பாலியில் நடைபெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பாக அவுஸ்ரேலியாவில் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஈராக்கிற்கு அதிகாரம் வழங்கினாலும்

# அமெரிக்காவின் கட்டுப்பாட்டில்தான் தமது நாட்டுப் படைகள் செயற்படுமாம்

## இராஜாங்க செயலர் கொலின் பவல் அறிவிப்பு

ஜூன் 30 இல் ஆளும் அதிகாரங்கள் ஈராக்கியர்களிடம் வழங்கப்பட்ட பின்னரும் அமெரிக்கப் படையினர், அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் செயற்படவுள்ளதாக அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிய அதிகாரிகளுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டாலும் படையினர் தன்னிச்சையாகவே செயற்படவுள்ளதாக கொலின் பவல் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை படையினரின் கட்டுப்பாடுகள் புதிய ஈராக்கிய அரசினால கட்டுப்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

பிரித்தானிய பிரதமர் ரொனி பிளேயரும், அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொலின் பவலும் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டுவருவதால் ஈராக் எவ்வகையான சுயநிர்ணய உரிமைமிக்க அரசைக் கொண்டிருக்கும் என அறியமுடியவில்லை என பி.பி.சி யின் ஜஷ்டின் வெப் தெரிவித்தார்.

அத்துடன் புதிய ஈராக்கிய அரசாங்கம் கேட்டுக் கொண்டாலும், அமெரிக்கப் படையினர் விலகுவதறகான தீர்மானம் எடுக்கப்படவில்லை என கொலின் பவல் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் 15 அங்கத்தவர்கள் ஈராக்கில் அதிகாரங்கள் கையளிப்பது தொடர்பான தீர்மானங்கள் தொடர்பான உரையாடல்களை மேற்கொண்டிருந்தனர். ஈராக்கிற்கான புதிய ஆட்சி அதிகாரங்களில் பல மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதேவேளை ஈராக்கின் ஆளும் சபை தெரிவிக்கும்போது, தமது எதிர்பார்ப்பிற்கு ஏற்றவாறு அமைந்திருந்தாலும், கூட்டுப்படையினரை



வெளியேறறும் அதிகாரங்கள் ஈராக்கியர்களுக்கு வழங்கப்படுவதை உறுதிப்படுத்தவேண்டும் என தெரிவித்துள்ளது.

# நூற்றுக்கு மேற்பட்ட ஓவியங்கள் பிரிட்டனில் தீயில் எரிந்து நாசம்!

சார்லஸ் சாச்சியின் நூற்றுக்கும் மேற்பட்ட ஓவியங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த களஞ்சியம் தீப்பற்றிக்கொண்டதால் எரிந்து சாம்பலாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நவன ஓவிய வகையைச் சேர்ந்த ராசி எமினஷின், ரென்ற் எனப்படும் சித்திரமும், டாமியன் கயஷ்ட், சாரா லுகாஷ், கரிகூமி ஆகியோரின் ஓவியங்களும் எரிந்துபோயுள்ளன.

பிரித்தானியாவின் லேரெனில் அமைந்துள்ள களஞ்சியம் தீப்பற்றிக்கொண்டவேளையில், இவ்வோவியங்கள் எரிந்துள்ளன. தீயணைக்கும் படையினர் தொடர்ந்து தீயை அணைப்பதற்கு போராடிவருகின்றனர்.

வெடித்துச் சிதறக்கூடிய வாயுச் சிலிண்டர்கள் உள்ளே காணப்படுவதால் அருகில் செல்லமுடியாதிருப்பதாக தீயணைக்கும் படையினர் தெரிவித்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நிலையான சமாதானம் ஏற்படுவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்!

## யாழ்ப்பாணத்தில் ஹரீம்பீரிஸ் தெரிவிப்பு

நாட்டில் நிலையான சமாதானம் ஏற்பட அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியம். இதன்மூலமே நாட்டைக்கட்டியெழுப்ப முடியும். இவ்வாறு ஜனாதிபதியின் பேச்சாளரும் புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளருமான ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று யாழ்.செயலகத்தில் பத்திரிகையாளரைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்

தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

எனது விஜயத்தின் நோக்கம் இங்குள்ள நிலமைகளை ஆராய்வதற்கும் அதிலிருந்து கற்றுக்கொள்வதற்குமே ஆகும். நிவாரணம் புனர்வாழ்வு என்பது இன்றைய காலகட்டத்தில் ஒரு முக்கியமான விடயம் என்பதனால் புனர்வாழ்வு நிவாரண நடவடிக்கையில் ஜனாதிபதி முக்கிய கவனம் செலுத்துவதனால் இந்தச் செயற்பாடுகளை உள்ளடக்கிய அமைச்சு ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்டது.

பழைய இயல்பு வாழ்வு மீண்டும் ஒன்று சேரவேண்டும் என்றால் விடுதலைப்புலிகள், அரசாங்கம், பொது மக்களின் நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து இந்தத் திட்டத்தில் ஒத்துழைக்கவேண்டும். இதன் மூலம் இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிக்க முடியும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

நாம் ஏற்றுக்கொண்டதைச் செயற்படுத்துவதற்கு மிகவும் விரைவாகச் செல்ல வேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திட்டு இரண்டு வருடமாகி விட்டது. எனவே நாம் திட்டமிடும் செயற்பாட்டில் ஈடுபட முடியாது. திட்டமிட்ட செயற்பாடுகளை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் செயற்படவேண்டும். நாம் தற்போது 3 ஆர் என்று சொல்லப்படும் திட்டத்தினை துரிதப்படுத்துவதுடன் ஜனாதிபதியினால் அமுல்படுத்தப்பட்ட செயற்பாட்டை விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

இந்தத் திட்டத்தில் மக்கள், விடுதலைப்புலிகள், பொதுமக்கள் சார்புடைய நிறுவனங்கள், அரசாங்கம் என்பன ஒன்றிணைந்து செயற்படவேண்டும். இனிவரும் இரண்டு மாத காலத்தில் இந்தச் செயல்திட்டங்கள் சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதை நீங்கள் அவதானிப்பீர்கள். இந்தச் செயற்பாட்டில் பாலங்கள் வீடுகள், மீளக்குடியமர்த்தல் போன்ற செயற்பாடுகள் அடங்குகின்றன. இதைத்தான் நான் ஓர் முன்னுதாரணமாகத் தெரிவித்தேன்.

உலர் உணவு தொடர்பான விடயங்களை நாம் நுணுக்கமாக ஆராய்ந்திருக்கிறோம். தற்போது நடைமுறையிலுள்ள திட்டம் 16 வருடங்களுக்கு மேலாக உள்ளது. இத்திட்டத்திற்கு வெளிநாட்டு நிறுவனங்களின் உதவி எமக்கு கிடைப்பதில்லை. நலனோம்பு விடயங்களுக்கு வெளிநாட்டு உதவி கிடைப்பதில்லை. அதேநேரத்தில் பல முக்கியமான விடயம் ஆராயப்படவேண்டும். ஆரம்பத்தில் இருந்தே பல முரண்பாடுகள், முறைகேடுகள் நடைபெறுவதாக எம்மால் உணரக் கூடியதாக உள்ளது. இவற்றை நாம் தற்போது மீள்பரி சீலனை செய்ய வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது.

ஒரு பழ மொழி இருக்கின்றது. ஒருவருக்கு மீனைக்கொடுப்பதிலும் பார்க்க தூண்டிலைக் கொடுப்பது நன்று. நாம் நிவாரணம் கொடுப்பது பெறு வோருக்கும் நல்லதல்ல. அரசாங்கத்திற்கும் நல்லதல்ல. நிவாரணம் கொடுத்தால் வாழ்நாள் முழுவதும் மக்கள் நிவாரணத்தையே நம்பிவாழ்வார்கள்.

குறிப்பாக அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது என்பது ஒரு அரசியல் இராணுவம் மற்றும் புலனாய்வு மற்றும் மனிதாபிமானம் போன்ற பல்வேறு விடயங்களுடன் தொடர்புடையது. ஏற்கனவே மீளக்குடியமர்த்தல் மூன்று பகுதியினராலும் தீர்மானிக்கப்பட்ட பகுதியில் மீளக்குடியமர்த்துவதே எமது தற்போதைய திட்டம். அபிவி ருத்தி என்பது நீண்டகால நோக்கமாகும். ஆனால் இலங்கையின் உயர்தரத்தில் வாழும் மக்களின் நிலைக்கு ஏனைய மக்களையும் உயர்த்துவதே எமது திட்டம். இது அபிவிருத்தியிலும் வேறுபட்டது என பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.



## ஹரீம் பீரிஸ் தலைமையிலான குழு யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம்!

ஜனாதிபதியின் பேச்சாளரும் புனர்வாழ்வு புனரமைப்பு நலலிணக்க அமைச்சின் பணிப்பாளருமான ஹரீம் பீரிஸ் நேற்றுக் காலை 10.00 மணியளவில் பலாலி விமானப் படைத்தளத்திற்கு வந்தடைந்தார். இவரை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையிலான அதிகாரிகள் பலாலி சென்றுவரவேற்றனர்.

பணிப்பாளர் காலை 11.30 மணியளவில் யாழ்.செலகத்திற்கு வந்தார். யாழ்.செயலகத்தில் யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால உட்பட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், புனர்வாழ்வு புனரமைப்பு யாழ்.மாவட்ட அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது நாடாளுமன்ற உறுபபினர் ரவிராஜ் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளருக்கு சில வேண்டுகோளை முன்வைத்தார்.

அந்த அடிப்படையில் நெடுந்தீவுப் போக்குவரத்திற்கு பயணிகள் படகு உடன் வழங்கவேண்டும். வல்லைப்பாலம் திருத்தப்படவேண்டும். கைதடியில் உள்ள 1200 குடும்பங்களுக்கு தொடர்ந்தும் நிவாரணம் வழங்கப்படவேண்டும். காணாமல் போனவர்களுக்கு அரசு தீர்க்கமான முடிவு தெரிவிக்க வேண்டும். முக்கியமாக புலிகளுக்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரத்தினை வழங்கி இயல்பு வாழ்க்கை திரும்ப நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

இவரது வேண்டுகோள்களில் கைதடி 1200 குடும்பங்களுக்கு நிவாரணம் தொடர்ந்து வழங்குவதற்கும் நெடுந்தீவு போக்குவரத்து பயணிகள் படகு வழங்குவதற்கும் உரிய நடவடிக்கை எடுப்பதாக ஹரீம்பீரிஸ் உறுதியளித்தார்.

## மாகாணசபைகளுக்கான தேர்தல் திகதி நாளை வெளியிடப்படும்!

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலுக்கான திகதி நாளை அறிவிக்கப்படும் என்று, தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

கலைக்கப்பட்டிருக்கும் ஆறு மாகாணசபைகளுக்கான தேர்தலை ஒரே தினத்தில் நடத்தவிருப்தாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தென், மேல், சப்ரகமுவ, மத்திய, வடமத்திய, ஊவா, ஆகிய ஆறு மாகாணசபைகளுக்கான தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் யாவும் நாளையுடன் பெறப்பட்டுவிடும்.

இதன் பின்னரேயே தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும். என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான விருப்பு வாக்கு இலக்கம் நேற்று முன்தினம் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் திங்கள் பின்வரும் ஐந்து வாரங்களுள் ஓர் சனிக்கிழமையே தேர்தல் நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும், உதவித்தேர்தல் ஆணையாளர் சேனநாயக்க தெரிவித்தார்.

### உறுதியான...

நாம் பெரும் முயற்சிகளை எடுத்து வருகிறோம்.

இவ்ஒருமைப்பாடு ஏற்பட்ட பின்னரே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும். தமிழீழ விடுதலைப்புலிகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை வலியுறுத்துகின்றனர். உண்மையான அபிவிருத்திக்கும் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்கும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரம் அவசியமாகவே உள்ளது.

இது குறித்து நாம் அரசுடன் கலந்தாலோசித்து வருகின்றோம். அரசின் நிலைப்பாட்டை நாம் தெளிவாக வெளிப்படுத்துமாறு அரசிடம் கேட்டுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின்

# உயர்மட்ட அதிகாரிகள் குழு யாழ். குடாவுக்கு விஜயம்!

(கொழும்பு)

உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் உயர்மட்ட அதிகாரிகள் குழு நேற்று யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்து நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட்டனர்.

உலக உணவுத்திட்ட அதிகாரிகளான பெனர் இயுறி, லோறா ஜெரிபன், கெலன் பசின்கு, கியுசெல்பே சைமன், ஆகிய அதிகாரிகள் கொண்ட குழுவே நேற்றுக் காலை யாழ்.குடாநாட்டிற்கு வந்திருந்தனர்.

உலக உணவுத் திட்ட ஸ்தாபனத்தின் உதவியுடன் தற்போது குருநகர், வேலணை, பருத்தித்துறை, ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களை நேரில் சென்று பார்வையிட்டனர். இவற்றுடன் குருநகர்ப் பகுதியிலிருந்து மீன்களைக் கொள்வனவு செய்து கொழும்புக்கு ஏற்றுமதி செய்வதற்கு மூன்று முகவர் நிலையங்கள் அமைப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் குழுவினர் மதியம் 2.00 மணிக்கு யாழ்.செயலகத்திற்கு சென்று பிரதித் திட்டமிடல் பணிப்பாளரைச் சந்தித்து தமது செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடினர்.

# மலைமகளின் புதிய கதைகள் நூல் நேற்று யாழ்ப்பாணத்தில் வெளியீடு!

போராளிக் கலைஞர் மலைமகளின் "புதிய கதைகள்" நூல் வெளியீட்டு விழா நேற்று மாலை 4.00 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

வவுனியா இறம்பைக்குளம் மகாவித்தியாலய ஆசிரியை பத்மா ஜெயச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை கலாநிதி சொக்கன் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக்கொடியினை யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைத்தார்.

கப்டன் வானதி வெளியீட்டகத்தைச் சேர்ந்த தமிழவள் வெளியீட்டுரையினை நிகழ்த்தினார். கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை சிறப்புரை நிகழ்த்தினார். நூல் ஆய்வுரையினை எழுத்தாளர் சாந்தன், வலிகாமம் வடக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

புதிய கதைகள் நூலினை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி வெளியிட்டு வைத்தார்.

# இலங்கைக்கான நிதியுதவி உறுதியளித்தபடி கிடைக்கும்

## லிகுலின்ஜின் தெரிவிப்பு

ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதியளித்தபடி இலங்கைக்கான நிதி உதவிகளை வழங்கும் என அதன் உபதலைவர் லிகுலின்ஜின் தெரிவித்தார்.

நிதியமைச்சர் சரத் அமுனுகமவை நேற்றுச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதியளித்தபடி இலங்கைக்கான நிதி உதவிகளை வழங்கும்.

ஆனால் வேலைகளைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு இங்குள்ள அரச அரசசார்பற்ற நிறுவனங்களிடமே உண்டு. அதன்படியே எமது நிதி உதவியும் விரைவு படுத்தப்படும் எனவும் அவா மேலும் தெரிவித்தார்.

### பிரதிப் பாதுகாப்பு...

கராவும், பேராசிரியர் விஸ்வ வர்ணபால வெளிநாட்டலுவல்கள் பிரதியமைச்சராகவும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இவர்கள மூவரும் நேற்றுக் காலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் தமது பதவிகளைப் பெற்றுச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்..

இவர்கள் மூவரும் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

### இந்திய...

ஜனதாக்கட்சி ஆட்சியில் பிரஜேஸ் மிஷ்ரா இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவராக 1987 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் டிக்ஸிற் பணியாற்றிய வேளையிலேயேஇலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்ததும் குறிப்பிடத்தக்கது.

### லொறி...

கப்பட்டுள்ளது. நீர்வேலிச் சந்திக்கு சமீபமாக வீதியின் ஓரமாக சைக்கிளில் சென்று கொண்டிருந்த நபரை லொறி மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

தலையில் பலத்த காயமடைந்த இளைஞன் நினைவிழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

### 15 ஈழ அகதிகள் நெடுந்தீவு வந்தனர்

தமிழகத்தில் வசித்து வந்த 15 ஈழத்தமிழ் அகதிகள் மீண்டும் நேற்று நெடுந்தீவை வந்தடைந்துள்ளனர்.

இவர்கள் மன்னார் நோக்கி பயணித்த போதும் கடல் கொந்தளிப்பு மற்றும் கடற்காற்றுக் காரணமாகவே நெடுந்தீவை வந்தடைந்தாகத் தெரிவித்தனர்.

திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம், ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இவர்கள் தற்போது நெடுந்தீவில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.

Reporters Publication Limited Company

தமிழ்மொழியில் வெளியாகும்
இலங்கை விகடன் வார இதழுக்கு

1. Corel Draw
2. Page Maker
3. Photo Shop

ஆகிய கணினி மென்பொருள்களில் பரீட்சயமுள்ளவர்கள் தேவை 31.05.04 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

ஆளணி முகாமையாளர்,
66/3 பழம் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தொலைபேசி
0777 - 917110.

(சி-2586)

சிங்களம்/ஆங்கிலம்

இப்பொழுது நீங்களும் இணைந்து கற்கலாம். நேரடி வகுப்புக் களும், தபால்மூல வகுப்புக்களும் நடைபெறும். க.பொ.த. இரண்டா வது மொழி, சிங்களம் ஆரம்பம்- ஜூன் முதல்வாரம். விபரங்களுக்கு எழுதவும் அல்லது நேரில் வரவும்

வழிகாட்டல் ஆசிரியர்
திரு மல்வான
56, அம்மன் றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(சி/2581)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.